விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 22 சனிக்கிழமை (05.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 048

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ்.சிறையிலிருந்த 13 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 கைதிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

3 பெண்கள் உட்பட 13 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஏதோ ஒரு காரணத்துக்காக சிறைக்கு வந்துள்ள இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை சந்தித்தார் அனோமா



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நேற்றுஅவரது பாரியார் அனோமா பொன்சேகா வெலிக்கடைச் சிறைச்சாலைக்குசென்றுபார்வையிட்டார்.

சுதந்திர தினத்தில் பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை பெற்றுக் கொடுத்தவர் சிறை வைக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்களிடம் அனோமா பொன்சேகா கூறியுள்ளார்.

இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு தழுவிய ரீதியில் ஆயிரத்து 623 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு விடுதலை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்டரில் குழந்தை பிரசவம்

(கொழும்பு)

ஹொரவப்பொத்தனை பகுதியில் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்ட ஒரு கர்ப்பிணி இலங்கை விமான படையின் 212 ஹெலிகொப்டரில் நேற்று வெள்ளிக்கிழமை குழந்தையொன்றை பிரசவித்துள்ளதாக விமான படை அறிவித்துள்ளது.

தற்போது தாயும் சேயும் அநுராதபுர பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நலமுடன் இருப்பதாக விமான படை பேச்சாளர் குறூப் கப்டன் வின் கொமாண்டர் ஜனக (16ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரத்தை பாதுகாக்கும் சவால் எப்போதும் தொடர்ந்து இருக்கும்!

## இயற்கையையும் வெல்லமுடியாது என்கிறார் ஜனாதிபதி

(கதிர்காமம்)

**சுதந்திரத்தை வெற்றிகொள்வது என்பது ஒவ்வொரு நாடும் எதிர்கொண்ட சவாலாகும். அந்த சுதந்திரத்தை பாதுகாப்பது அதை விட பெரிய சவாலாகும். ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டம் ஒரு காலப்பகுதியில் முடிபடைந்து விடலாம். ஆனால் சுதந்திரத்தை பாதுகாத்து கொள்வதற்கான சவால் எப்போதும் தொடர்ந்திருக்கும். எனவே ஆர்வத்துடனும் விழிப்புணர்வுடனும் நாட்டின் மீதான பற்றுடனும் பெரும் போராட்டம் ஒன்று தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார்.**

இலங்கையின் 63ஆவது சுதந்திரதினம் நேற்று கதிர்காமத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

30 வருடகால பயங்கரவாத காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களைத்தவிர நாடு இழந்த ஏனைய எல்லாவற்றையும் பெற்றுக்கொடுப்பதற்கான சவாலை நாம் எதிர்கொண்டுள்ளோம் அத்தகைய அழிவுகளை எதிர்நோக்கியே ஒரு நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அதிக காலம் தேவைப்படும் என்பதை உலக வரலாறு வெளிப்படுத்துகின்றது.

**இயற்கையை வெல்ல முடியாது**

தற்போது மோசமான கால நிலை மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக உலகில் பல நாடுகள் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றன. எமது நாட்டிலும் சில பகுதிகளில் எமது சொந்த பிரஜைகளும் இத்தகைய நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். மோசமான கால நிலையின் தாக்கத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாத போதிலும் அதில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவ நாம் உறுதி பூண்டுள்ளோம்.

எந்தத்தடை வந்தாலும் நாம் இழந்த பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நாம் தாமதிக்க முடியாது. கண்ணிவெடிகள் நிறைந்திருந்த பகுதிகளை இரு வருடங்களுக்குள் நாம் விவ (16ஆம் பக்கம் பார்க்க)



சுதந்திர தின விழா நிகழ்வில்...

## 'சுதந்திரத்தின் கதறல்' ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட, சுதந்திரத்தின் கதறல் எனும் சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஆளுங்கட்சிக் குண்டர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதன் போது செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய ஊடக உபகரணங்களும் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

பொரளையில் ஆரம்பித்த ஊர்வலம் பேஸ்லைன் வீதி வழியாக வெலிக்கடைச் சிறைச்சாலையை அண்மித்த பொழுதே குண்டர்கள் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். ஆர்ப்பாட்டத்தில்கலந்துகொண்டவர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 33 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக 33 ஆயிரத்து 149 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 988 பேர் இடம் பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 13 ஆயிரத்து 148 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 57 பேர் 105 நலன்புரி முகாம்களிலும் 20ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 931பேர் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## தடுக்கக்கோரி பாதுகாப்பு செயலருக்கு யாழ். அரசஅதிபர் கடிதம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மீனவர்களின் பிரச்சினையை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு உதவுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

காரை நகர் கடற்கரை தொழிற் சங்கங்களின் சமாசம் மற்றும் மாதகல் கடற்தொழிலாளர் சங்கம் ஒன்றிணைந்து இந்திய மீனவர்கள் தமக்கு இழைக்கும் அநீதி தொடர்பில் தனக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இம் மனுவில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் தங்களது வலைகளை சேதப்படுத்துவதுடன் வள்ளங்களை சேதப்படுத்துவதாகவும் இச் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன் இவ்வாறான இந்திய மீனவர்களின் செயற்பாடுகளால் தாங்கள் வாழ்வாதார செயற்பாடுகளை (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்-கொழும்பு பஸ்சேவை மழை வெள்ளத்தால் தடைப்பட்டது

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் பஸ் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு தெற்கே அநுராதபுர மாவட்டத்தில் மதவாச்சிக்கும் இரம்பாவைக்கும் இடையே ஏ9 வீதியில் பல அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்வதால் அந்த வீதியின் ஊடான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன.

நேற்று முன்தினம் இரவும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்துகளில் புறப்பட்ட பயணிகள் இடையில்சிக்கிபெரும்சிரமங்களுக்கு உள்ளானார்கள்.

இவர்கள் நேற்றுக் காலை அநுராதபுரத்திற்கு திரும்பிச் சென்று ரயில் மூலமாக வவுனியாவை வந்தடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு பேருந்துகளில் பயணமானார்கள்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பயணிகள் நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து ரயில் மூலம் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

ஏ-9 (16ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# 5000 ரூபாய் நாணயத்தாள் வெளியாகியது

(கொழும்பு)

ஐயாயிரம் ரூபாய் நாணயத்தாளை இலங்கை மத்திய வங்கி நேற்று வெள்ளிக்கிழமை மாலை வெளியிட்டது. புத்தலவில் நடைபெறும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் நடைபெற்ற வைபவமொன்றின்போது இந்நாணயத்தாள் வெளியிடப்பட்டது.

முதலாவது 5ஆயிரம் ரூபாய் நாணயத் தாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வழங்கினார். (ச-5)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


# முல்லைத்தீவில் வெள்ளம் காரணமாக
## 26ஆயிரம் பொதுமக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக 8ஆயிரத்து 102 குடும்பங்களை சேர்ந்த 26 ஆயிரத்து 370 பேர் பாதிப்படைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரிவில் 61குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும், கரைதுரைப்பற்று பிரிவில் 247 குடும்பங்களைச் சேர்ந்த 821பேரும் தமது வீடுகளிலிருந்து வெளியேறி பாடசாலைகளில் தங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். ஏனையோர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு பொதுமக்களின் உதவியுடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமைத்த உணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனிக்குளம், முத்தையன் கட்டுக்குளம், உடையார்கட்டுக்குளம், வான்முறிப்புக்குளம் போன்ற 18 நீர்ப்பாசனக்குளங்கள் நிரம்பி வழிவதால் வான்கதவுகள் திறந்து விடப்பட் டுள்ளது. வெள்ளம் காரணமாக விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியில் புழுதியாறுக்குளம் உடைப்பெடுக்கும் அபாயமுள்ளதுடன், இரணைமடுக்குளத்தின் 10 வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-5)

# இலங்கை பொருளாதாரத்தில் முன்னேற்றம்
## சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கை பொருளாதாரத்தின் மேல்மட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது. இலங்கைக்கு வழங்கிவரும் கடன் தொகையின் ஆறாவது தவணையை அளிப்பதற்கும் அது ஒப்புதல் அளித்துள்ளது.

உள்நாட்டுப்போரின் பின்னரான நிலைமைகளிலிருந்தும், உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் இலங்கை மீள்வதற்கு உதவும் பொருட்டு சர்வதேச நாணய நிதியம் இந்தப் பெரும் கடன் தொகையை வழங்குவதற்கு 18மாதங்களுக்கு முன்னர் இணங்கியிருந்தது.

நாட்டின் பொருளாதாரம் அடிப்படை மட்டத்தில் பலமடைந்துள்ளதாக தென்படுவதாக ஐ.எம்.எஃப் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரவுசெலவு திட்டத்தின் துண்டுவிழும் தொகையைக் குறைப்பதற்காக முன்வைக்கப்பட்ட இலக்குகளில் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமும் பற்றாக்குறை நீடிக்கின்ற போதிலும் சுமார் 200 மில்லியன் டொலர்கள் வரையான அடுத்த தவணைக் கடன் தொகையை வழங்குவதற்கு ஐஎம்.எஃப் உடன்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் வரவு செலவு திட்டத்தினூடாக இலங்கை கொண்டு வர உத்தேசித்துள்ள வரி மறுசீரமைப்புத் திட்டங்களினால் சர்வதேச நாணய நிதியம் திருப்தியடைந்துள்ளது.

பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி விடயங்களில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியுள்ள ஐ.எம்.எஃப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷி மாதய், முப்பது வருட கால போருக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் மெச்சத்தக்க விதத்தில் இருந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த முப்பது வருடகாலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை ஐந்திலிருந்து ஆறுக்குள் வைத்திருக்க முடிந்துள்ளமை அதிசயமான விடயம் தான் என்று அவர் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டில் இந்த கடனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டபோது, ஐ.எம்.எஃப்பின் தலைமை இயக்குநர், இலங்கை அதன் இராணுவச் செலவினங்களை பெருமளவில் குறைத்து போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான சமூக பாதுகாப்பு கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதாக கூறியிருந்தார்.

ஆனால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நிவாரண மானியங்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதாக மனித நேயப் பணியாளர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தோடு வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடும் தொடர்ந்தும் எகிறிக்கொண்டே போகின்றது.

ஆனால் இந்தத் தொகையில் பெருமளவு நிதி மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்காகவே தற்போது செலவிடப்படுமென அரசாங்கம் வாதிடுகின்றது. (ச-5)

## விசேட பிரார்த்தனை

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இன்று பி.ப 2.30 மணி முதல் விசேட பிரார்த்தனை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நாட்டில் தற்போது பெய்து வருகின்ற மழையை உடனடியாக நிறுத்தி மக்களை அவலங்களில் இருந்து பாதுகாத்து கொள்ளுமாறு வேண்டி பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறவுள்ளதால் பக்தர்களை கலந்து பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பிரார்த்தனை மையத்தினர் அழைக்கின்றனர். (ச)


**வேலைக்கு ஆட்கள் தேவை**

ஸ்ரீ கற்பகவிநாயகர் தளபாட நிலையத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை.
நேரில் வரவும்
512, கே.கே.எஸ். வீதி,
மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.
021 4922941
(3645)



**தவறிவிட்டது**

தீனபந் ரிஷ்யந்தன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (923003924V) கொழும்புசென்று வந்தபோது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துஉதவும்.
தொடர்புக்கு: ப.தீனபந்
209/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:0774896728
(3640)



**தேவை**

நீங்கள் G.C.E. O/L, A/L சித்திய டைந்தவர்களா, வேலை வாய்ப்பை எதிர் பார்த்துக் கொண்டுள்ளீர்களா, அப்படியானால் நீங்கள் எங்களுடன் இணையுங்கள். இளைஞர், யுவதிகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம், 6 மாத கால முகாமைத்துவ பயிற்சியின் பின் (*MARCKETING MANAGEMENT*) நிரந்தர வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படும். பயிற்சியின் போது ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். பயிற்சியின் பின் பதவி உயர்வுடன் 25,000க்கு மேல் மாதாந்த கொடுப்பனவும், வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பும் கிட்டும். வெளிமாவட்டத்தவர்களும் விண்ணப்பிக்கலாம், தங்குமிட வசதி செய்து தரப்படும்.
நேர்முகத் தேர்வுக்கு இன்றே அழையுங்கள்: 0770229438, 021 4900350
(3638)


# 2ஆவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு
22
04
1954

அராஜக அழிப்பு
29
01
2009

## திருமதி தில்லைநாதன் சிவநேசராணி

திதி-பூர்வபட்ச திருதியை 05.02.2011

ஆண்டு இரண்டு கடந்து போனதுவே
ஆறாது துவள்கிறதே எங்கள் உள்ளம்
எங்கு நோக்கினும் உங்கள் அன்புவதனம்
அம்மா என்று தீரும் எங்கள் துயரம்
விழிகளில் ஈரம் மட்டும் காயவில்லை
அனலிடைப் புழுவாய், துடுப்பற்ற படகாய்
துடிக்கிறோம் நாம் துயர் தீர்க்க வாராயோ
சீரான கல்வி பெற வைத்தே
செழிப்புடன் வாழவைக்க ஊர்மாறி ஊர்
ஓடி கண்ட தென்ன கலங்குகிறோம் நாம்



(3642)

ஒரு கொடியில் பூத்த இருமலர்கள்
தி.ஆனந்தநிருஜா (மகள்)
தி.ஆனந்தவர்ணன் (மகன்)

மட்டுவில் நாடு,
கிழக்கு, பூநகரி.

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துத்தம்பி நாகரத்தினம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி நாகரத்தினம் நேற்று முன்தினம் (03.02.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு-பூரணம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் சகுந்தலாதேவி(கொழும்பு), கமலாதேவி, ஜெயரத்தினம் (ராஜி திருமணசேவை) ஆகியோரின் பாசமிகு தாயும் கேபேட் இக்னேசியஸ், சதாசிவம், இராஜசிறி ஆகியோரின் மாமியாரும் அன்ரன் பிரதீப், கரிதரன், ஜோதிகா, வெங்கடேஸ்வரன், கவிதாரணி, ஜெயசிறி(காந்தி), ஜெயகாந்தி(மீரா-ஜேர்மன்), ஜெயகோபி, ஜெயசந்துரு, நந்தகோபன், கிருஸ்ணசன்ரா, பாஸ்கரன் (ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியும் ஓவியா (ஜேர்மன்)வின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.02.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தொடர்புகளுக்கு:-
மு.ஜெயரத்தினம்-0774745647
சிவன் வீதி, ஆவரங்கால்.

தகவல்
பிள்ளைகள்

(சி-1080)

# இன்று ஒரு தகவல்

## அரசியின் பரிசு

வியன்னாவில் ஒரு பெரிய பியானோ கலைஞர் இருந்தார். அவர் மிகவும் புகழ்பெற்ற இசைக்கலைஞர்.

இங்கிலாந்து மகாராணி விக்டோரியா அவருடைய சங்கீதத்தைக் கேட்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அவரை அரண்மனைக்கு அழைத்தார்கள். பியானோ வாசிக்கச் சொல்லி கேட்டார்கள்.

இவரும் ரொம்பப் பிரமாதமாக வாசித்தார். பாராட்டி பரிசுகளெல்லாம் கொடுத்தனுப்பினார்.

அந்த இசையைக் கேட்பதில் அரசிக்கு மிகுந்த ஆர்வம். அதனால் அந்தக் கலைஞர் அடிக்கடி அரண்மனைக்கு வருவதுண்டு. பாடி வாசித்துக்காட்டுவார்.

ஒரு சமயம் மகாராணி பார்த்து, "உங்கள் நாட்டு தேசியகீதம் பாடுங்கள்" என்று கேட்டாராம்.

உடனே அவர் தனது நாடான ஆஸ்திரியாவின் தேசிய கீதத்தை பாடியிருக்கிறார்.

அவர் பாட ஆரம்பித்தவுடன் மகாராணி எழுந்து நின்றாராம்.

அதற்கு மரியாதை செலுத்தும் நோக்கோடு பாட்டு முடியும் வரைக்கும் அப்படியே நின்று கொண்டிருந்தாராம்.

அந்த முதிய கலைஞரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதன்பின் அந்தப் பியானோ கலைஞர் ஒருநாள் தன்னுடைய நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தாராம்.

அப்பொழுது சொன்னாராம்:

மகாராணியார் எனக்கு எவ்வளவோ பரிசுகள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு தடவை எனக்கு வைரக்கல் பதித்த அணி ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

ஆனால் அதைவிட உயர்ந்த விலை மதிக்க முடியாத அணி எது தெரியுமா?

எனது நாட்டுத் தேசிய கீதத்தை நான் பாடும்போது அவர் எழுந்து நின்று மரியாதை கொடுத்தாரே! அது தான் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு என்றாராம்.

எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான் ஒருத்தர் இருக்கிறார். சமீபத்தில் ஒரு நாள் அவரைப் பார்த்தேன்.

"உங்களுடைய தொழில் எப்படி போய்க் கொண்டிருக்கிறது?" என்று கேட்டேன். "ரொம்பவும் வித்தியாசமாக போய்க் கொண்டிருக்கிறது" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்றேன்.

"முன்பெல்லாம் நான் பாடினால் எதிரில் இருப்பவர்கள் தான் எழுந்து போவார்கள். ஆனால் இப்பொழுது நான் பாட ஆரம்பித்தால் பக்க வாத்தியக்காரனே உடனே எழுந்து போய் விடுகிறான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மட்டு.மாவட்டத்தில் வெள்ளத்தினால் விவசாயம் பெருமளவில் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2010/ 2011 ஆம் ஆண்டுகளில் பெரும்போகத்தில் செய்கை பண்ணப்பட்ட ஒரு இலட்சத்து 49ஆயிரத்து 657 ஏக்கர் வேளாண்மை செய்கையில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 2 ஏக்கர் வேளாண்மை அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ளதாக மாவட்ட விவசாய பிரதிப்பணிப்பாளர் இரா.ஹரிகரன் தெரிவித்தார். எதிர்வரும் சிறுபோகத்தின் போது 53ஆயிரத்து 583 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச்சேர்ந்த 20ஆயிரத்து 713 விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 60ஆயிரத்து 749 புசல் விதை நெல்லை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இதே வேளை 2011/2012 ஆம் ஆண்டுகளில் பெரும்போகம் 61ஆயிரத்து 419 ஏக்கரில் செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அதில் ஈடுபடும் 24 ஆயிரத்து 986 விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 84ஆயிரத்து 257 புசல் விதை நெல் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சுதந்திர தினத்தன்று பிறந்த குழந்தைகளுக்கு பண வைப்பு

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினத்தன்று யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளுக்கு யாழ். மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையினால் 500 ரூபா கொடுப்பனவுடன் வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சுதந்திர தினத்திலிருந்து ஒருவார காலப்பகுதியில் பிறக்கும் குழந்தைகளுக்கும் பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் என். நாகேஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீபவாணந்தராஜா மற்றும் மக்கள் வங்கியின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# யாழ்ப்பாண மாவட்ட வளங்கள், பயன்பாடு அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் "யாழ்ப்பாண மாவட்ட வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி தொடர்பான வழிமுறைகள்" எனும் தலைப்பில் இரு நாள் செயலமர்வு இன்றும் நாளையும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை நல்லூர் தியாகி அறைக்கொடை நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தனியார் முதலீட்டு திட்டங்களுக்கும் வழிகாட்டும் நோக்கில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் எமது பௌதிக வளங்களையும், மனித வளங்களையும் அடையாளம் காணுதல் அவற்றின் பயன்பாடு, மற்றும் அபிவிருத்திக்கு அவற்றை எவ்வெவ் வழிகளில் பயன்படுத்தலாம் எனும் அம்சங்கள் துறைசார் நிபுணர்களால் ஆய்வுசெய்து முன்னிலைப்படுத்தப்படவுள்ளன.

பேராசிரியர்களான சிவநாதன், மிகுந்தன், சிவசந்திரன், கலாநிதிகளான சூசை ஆனந்தன், ஜெயலிங்கவதனி சின்னையா, சந்திரசேகரன் ஆகியோரும் விரிவுரையாளர்களான சுபாஜினி உதயராசா, இராஜேஸ்கண்ணா, சரவணபவன், றொபின்சன், இரவீந்திரன் ஆகியோரும் தமது ஆய்வுகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். புலமையாளர்களும், திட்டமிடுவோரும் திட்டங்களை அமுல்படுத்தும் நிர்வாகிகளும் இச்செயலமர்வில் ஒன்று கூடவுள்ளனர்.

இச்செயலமர்வில் பங்குபற்ற விரும்புவோர் சிந்தனைக்கூடப் பணிப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரனுடன் தொடர்பு கொண்டு தமது வருகையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் வருகையை உறுதிப்படுத்த 021 222 3274/077726 6075 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ)

# சிறு கதைத்தொகுதி கட்டுரைத்தொகுதி வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

க.பரணிதரன் எழுதிய சிறுகைத்தொகுதியான "மீண்டும் துளிர்ப்போம்..." மற்றும் கட்டுரைத் தொகுதியான "இலக்கியமும் எதிர்காலமும்" வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.15 மணியளவில் அல்வாய் கலையகத்தில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை ஜீவநதி துணையாசிரி யர் வெ.துஷ்யந்தன் ஆற்றுவார். நூலின் அறிமுக உரைகளை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான பா. தனபாலன் , கே.ஆர்.கே.கமலநாதன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

நூல் வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்த மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணன் , வலம்புரி பிரதம ஆசிரியர் என். விஜயசுந்தரம் ஆகியோர் ஆற்றுவார்கள். ஏற்புரையை க.பரணிதரன் நிகழ்த்துவார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 280 | 280 | 250 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 350 | 380 | 400 | 350 |
| தக்காளி | 80 | 160 | 160 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 100 |
| கரட் | 100 | 120 | 150 | 120 |
| பூசணி | 30-40 | 50 | 50 | 40 |
| புடோல் | 70 | 130 | 120 | 90 |
| வாழைக்காய் | 35 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200-250 | 300 | 280 | 300 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 180 | 200 | 170 |
| வெண்டிக்காய் | 90 | 140 | 200 | 130 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 200 | 90 | 250 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 200 | 130 |
| பீற்றூட் | 70 | 130 | 160 | 120 |
| கறிமிளகாய் | -- | 250 | 300 | 270 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 220 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

*05.02.2011*

*(தை 22, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*

*துதியை முற்பகல் 11.46 மணி வரை*

*சதயம் முன்னிரவு 7.38 மணிவரை*

*இராகு காலம் 9.35-11.05 மணிவரை*

*சுப நேரம் 3.35-5.05 மணிவரை*

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணம் செல்ல போட்ட திட்டம் நிறைவேறலாம்.

**இடபம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், ஆரோக்கியமான நாள், விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் பெருமை வந்து சேரும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக் கலக்கம் மாறும், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரும்.

**கடகம்** கடவுள் வழிபாட்டால் காரியம் நிறைவேற வேண்டிய நாள், விலை உயர்ந்த பொருட்களைக் கையாள்வது கவனம், கௌரவக் குறைவான நாள்.

**சிங்கம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழில் விருத்தியுண்டு.

**கன்னி** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பல நாட்களாக வசூல்பண்ண முடியாத பாக்கிகள் வசூலாகலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பூர்வீகச சொத்துக்களால் இலாபம் கிடைக்கும், வாகன யோகமுண்டு, தொழில் விருத்தியுண்டு.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவம் நடைபெறும் நாள், பண வரவு அதிகரிக்கும், புத்தி சாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள், பெருமையடைய வேண்டிய நாள்.

**கும்பம்** காரியதாமதமுண்டு, கற்பனைகள் குடிகொள்ளும், போசன சுகமுண்டு, சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், ஆரோக்கியத்தில் கூடிய கவனமெடுப்பீர்கள்.

**மீனம்** ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபசெய்திகள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவுண்டு.



இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறையிலிருந்து 13 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதனையொட்டி நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் காமினி பண்டார, அருட்தந்தை எஸ்.சோமன் ஆகியோர் உரையாற்றுவதையும் கைதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் க.பொ.த(உ/த) பிரிவில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி செயலமர்வு எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் வடமராட்சி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு வருகைதரும் ஆசிரியர்கள் தரம் 12, 13 இற்குரிய அறிவுரைப்பு வழிகாட்டியை தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(அல்வாய்)

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. இரகுநாதன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

✠✠✠

(அல்வாய்)

வல்வெட்டி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அம்பலவாணர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# இரவு வேளைகளில் மின்குமிழ்கள் ஒளிராமையால் மக்கள் சிரமம்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேச பிரதான வீதிகளில் இரவு வேளைகளில் மின்குமிழ்கள் ஒளிராமையால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருட்டு முயற்சிகளும் பரவலாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-24)

# செயற்குழுக் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நிறுவனத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சங்கங்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டு பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு சகல நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# மழை காரணமாக பஸ் போக்குவரத்து பாதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு புறப்பட்ட இ.போ.ச பேருந்து கடும் மழை காரணமாக மதவாச்சிப் பகுதியுடன் பயணத்தை இடைநிறுத்தி மீண்டும் யாழ்.நோக்கி திரும்பியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணிக்குப் புறப்பட்ட பேருந்தே இவ்வாறு பயணிக்க முடியாமல் திரும்பியுள்ளது. (ஸ்ரீ-3-10)




# கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் கொழும்புத்துறையில் மீள்குடியேறிய மக்களுக்கு 20 வீடுகள் நிர்மாணம்

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய கொழும்புத்துறை மக்களுக்கு 8இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் 20 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை பேனாட் றெக்னோ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மேற்படி வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.கொழும்புத்துறை 5ஆம் குறுக்கு வீதியிலும் வலம்புரத்திலும் உள்ள இரண்டு வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜே/62 கிராம சேவகர் ஏ.சர்வேஸ்வரன் மற்றும் 20 வீட்டுத் திட்டப் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-51)

# சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினால் நலத்திட்ட உதவிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் 39 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ள மேற்படி மன்றத்தின் 32 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் வைத்து இவ்வுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய சாவகச்சேரி பரம்ஸ் மோட்டார் நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் காரணமாக தந்தையை இழந்த 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர் நமசிவாய அவர்களின் நினைவு புலமைப்பரிசிலாக 9 மாணவர்களுக்கு நிதியுதவியும் சாவகச்சேரி ரெலிகோணர் உரிமையாளர் கு.தவராசசிங்கம் நினைவாக இரண்டு விதவைகளுக்கான உதவு தொகையும் வழங்கப்படவுள்ளது.

மேலும் சாவகச்சேரி வதனி ஜுவலர்ஸ் நிறு வனத்தின் உரிமையாளர் ச. இரத்தினத்தின் நினைவுப் புலமைப்பரிசில் உதவி ஒரு மாணவருக்கு வழங்கப்படவுள்ளது. அத்துடன் சாவகச்சேரி எழுகதிர் நிறுவன உரிமையாளர் த.குகநேசனால் இரு ஊனமுற்றவர்களுக்கு உதவு தொகையும், சங்க உறுப்பினர்களின் நிதியுதவியுடன் 15 மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவியும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-29)

# பொதுமக்களிடம் பணம்பறிக்க முயன்ற இருவர் கைது

(கொழும்புத்துறை)

போலியான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பொதுமக்களிடமிருந்து பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு நபர்களை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந் நபர்கள் யாழ்ப்பாண பேருந்துகளில் மகனுக்கு இதய சத்திரசிகிச்சை என பல்வேறு காரணங்களைக் கூறியும் போலியான ஆவணங்களைக் காட்டியும் மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவர்கள் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து பல மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சாஸ்திரம் சொல்லுதல், குறிசொல்லுதல், பில்லிசூனியம் அகற்றுதல், வெளிநாட்டிற்கு அனுப்புவதாக மந்திர கயிறு கட்டுதல் போன்ற செயற்பாடுகளில் பலர் மோசடி செய்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக மக்களை விழிப்பாக இருக்குமாறு யாழ்ப்பாண பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# சைவ சித்தாந்த , பிரவேச பாலபண்டிதர் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் கடந்த ஆண்டு மார்கழி மாதம் நடாத்தப்பெற்ற சைவசித்தாந்த, பிரவேச,பால, பண்டிதருக்குரிய பெறுபேறுகளை பரீட்சை செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெயர் விபரம் வருமாறு,

**சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர்**

திருமதி இந்திராணி ஈஸ்வரானாந்தம் 3ஆம் பிரிவு தெல்லிப்பழை


**சைவசித்தாந்த பால பண்டிதர்**

செல்வி ராஜிதா கைலாயநாதன் 3ஆம் பிரிவு தெல்லிப்பழை, செல்வி பிராப்தனா இராஜசூரியர் 3ஆம் பிரிவு சுன்னாகம், திருமதி சிவஞானம் சரோஜினிதேவி 3ஆம் பிரிவு திருகோணமலை, திருமதி சிவஞான் ஜோதி ஞானசூரியம் 3ஆம் பிரிவு மட்டக்களப்பு

**சைவசித்தாந்த பண்டிதர்**

சின்னராசா ரமணராசா 2ஆம் பிரிவு அளவெட்டி, சின்னத்தம்பி விசுவாசம் 3ஆம் பிரிவு நீர்வேலி, சந்தோசம் ஜெயலட்சுமி 3ஆம் பிரிவு கொழும்பு. (ஸ்ரீ-9)

# ஊழல் குற்றச்சாட்டில் உழலும் நேரு குடும்பம் நேர்மையானதா?



ராஜீவ்காந்தி தனது அரசியல் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு தன்னை ஒரு நேர்மையாளராகக் காட்டிக்கொள்ள முற்பட்டதுதான். அவரது அரசியல் பிரவேசத்தின்போது அட்டையில் அவரது படத்தைப்போட்டு மிஸ்டர் க்ளீன் (திருவாளர் பரிசுத்தம்) என்று வர்ணிக்காத பத்திரிகைகளே இல்லை எனலாம். அரசியலில் அவர் தோற்றுப் போனதற்கும் இதுதான் காரணம். ராஜீவ் காந்தியால் தான், ஏற்படுத்திக் கொண்ட அந்த மக்கள் மத்தியிலான நன்மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போனதுதான் அவரது தோல்விக்கு முக்கிய காரணம்.

ஆனால், இந்திராகாந்தி, ராஜீவைப் போன்றவரல்லர். 'உங்கள் அரசில் ஊழல் தலைவிரித்தாடுகிறதே' என்று கேட்டபோது, 'உலகமெல்லாம் நடப்பதுதான்' என்று அலட்டிக்கொள்ளாமல் பதிலளித்தவர் அவர். இது நடந்தது 1983ஆம் ஆண்டில்.

இந்திரா காந்தி இப்படிப் பேசியது பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. நாட்டின் பெரிய பொறுப்பிலுள்ள ஒருவர், ஊழல் சகஜமான ஒன்றுதான் என்று கூறினால், ஊழலை ஒழிப்பது எப்படி என்று டில்லி உயர்நீதிமன்றத்தின் நேர்மையான நீதிபதி ஒருவர் வேதனைப் பட்டார். ஆனால், இந்திராவின் பேச்சு அவருக்குச் சாதகமாகவே அமைந்தது. ஆம், தம்மைப் பரிசுத்தமானவர் என்று கூறிக்கொள்ளாத ஒருவர்மீது ஊழல் குற்றச்சாட்டுக்களைக் கூறி என்ன ஆகிவிடப் போகிறது என்கிற மனநிலை எதிர்க்கட்சிகளுக்கு வந்துவிட்டது. அதன்பிறகு இந்திரா மீது எப்போதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழவேயில்லை.


இப்படி அரசியலில் யதார்த்தமாக இந்திராவுக்கு நேர் எதிரானவராக ராஜீவ்



நடந்துகொண்டார். தம்மைத் திருவாளர் பரிசுத்தம் என்று கூறிக்கொள்வதில் அவர் பெருமையடைந்தார். அதனால் ஏற்படப்போகும் அபாயங்கள் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. விளைவு, போபர்ஸ் பீரங்கி பேரத்தில் நடந்த முறைகேடுகள் அம்பலமாகி, 1989 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்தது. ஆட்சி பறிபோயிற்று.

உண்மையிலே நேர்மையானவராக இல்லாதபோது, திருவாளர் பரிசுத்தமாகக் காட்டிக்கொள்வது கூடாது என்பது தான் இதனால் அறியப்பட்ட அரசியற் பாடம். இந்தப் பாடத்தைச் சோனியா காந்தி தெரிந்துகொள்ளவில்லை என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால், ஊழலைப் பற்றிப் பேசும்போது இந்திராவின் பாதுகாப்பான வழியைத் தேர்ந்தெடுக்காமல், ராஜீவின் அபாயகரமான வழியைச் சோனியா தேர்ந்தெடுப்பாரா?

அலாகாபாத் கட்சிக் கூட்டத்தில் பேசிய அவர், 'ஊழலைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன்' என்று ஆவேசமடைந்தார். அத்துடன் விடவில்லை. ஒரு



வாரம் கழித்து டில்லியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிலும் தன்னைப் பரிசுத்தமானவராகவும், எந்தவித ஊழல் கறையும் படியாதவராகவும் காட்டிக்கொள்ள அவர் முற்பட்டார். 'ஊழலை வேரறுக்க வேண்டும்' என்று கட்சித் தொண்டர்களுக்கு அறிவுரை கூறியதுடன், தேசத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் ஊழலுக்கு எதிராக உடனுக்குடன் கட்சி, நடவடிக்கை எடுக்கும் என்றும் முழங்கினார். இந்த முழக்கம் 25 ஆண்டுகளுக்கு முன்பு மும்பையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ராஜீவ் காந்தி பேசியதைத்தான் நினைவுபடுத்துகிறது.

இருப்பினும் ராஜீவுக்கும் சோனியாவுக்கும் இடையே இரு முக்கிய வேறுபாடுகளைக் குறிப்பிட முடியும். தம்மைத் 'திருவாளர் பரிசுத்தம்' என்று ராஜீவ் காந்தி கூறிக்கொண்டபோது, அவருக்கு எதிராக எந்த ஊழல் புகாரும் இருக்கவில்லை. அதனால் ஊழல் புகாரிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இப்படிப் பேசினார் என்று கூறமுடியாது. ஆனால், இப்போது கொமன்வெல்த் விளையாட்டு, ஆதர்ஷ் குடியிருப்பு முறைகேடுகள், 2ஜி ஸ்பெக்ட்ரம் என ஒன்றன்பின் ஒன்றாகக் காங்கிரஸ் கட்சியின் ஊழல் பட்டியல் வளர்ந்துகொண்டே போகிறது. இந்தநிலையில், ஊழலைப் பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா கூறிவருவது முரண்சுவையாக அல்லவா இருக்கிறது.

இரண்டாவது வேறுபாடு, எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் அரசியல் வாழ்வைத் தொடங்கிய ராஜீவ், போபர்ஸ் ஊழல் வெளியாகும் வரை எந்தக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் இருந்தார். இதற்கு நேர் எதிராகச் சோனியா மீது இரகசியமான சுவிஸ் வங்கிக் கணக்குகள், போபர்ஸ் வங்கிக் கணக்குகள், போபர்ஸ் கமிஷன் என நம்பத்தகுந்த ஊழல் புகார்களும் அவருக்கு எதிரான அதிர்ச்சியளிக்கும் ஆவணங்களும் வெளியாகியிருக்கின்றன.

சோனியாவின் குடும்பம் லஞ்சம் பெற்றதாகப் பிரபல சுவிஸ் பத்திரிகையில் ரஷ்யப் புலனாய்வுச் செய்தியாளர் ஆதாரத்துடன் எழுதிய கட்டுரைக்குச் சோனியாவோ, அவரது குடும்பத்தினரோ எந்த மறுப்பும் இதுவரை தெரிவிக்கவில்லை. செய்தி வெளியிட்ட பத்திரிகைமீது வழக்குத் தொடுக்கவும் இல்லை. பின்னணி இப்படி இருக்கையில், 'திருடன், திருடன்' என்று திருடனே கத்திக்கொண்டு தப்பி ஓடுவது போல, ஊழலைப் பொறுக்கமாட்டேன் என்று கூறிக்கொண்டிருக்கிறார் சோனியா என்பதுதான் வேடிக்கை.

### 2.2 பில்லியன் டொலர்க் கதை

1991ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி சுவிற்சர்லாந்தின் 'ஸ்வீசர் இல்லஸ்ரேட்' இதழ் சோனியாவைப் பற்றி அதிர்ச்சிகரமான கட்டுரை ஒன்றை வெளியிட்டது. ராஜீவ் காந்தி உள்ளிட்ட பன்னிரண்டுக்கும் அதிகமான அரசியல்வாதிகளின் இரகசியங்கள் அதில் அம்பலமாகின. போபர்ஸ் பேரத்தில் கிடைத்த லஞ்சப் பணத்தைச் சுவிஸ் வங்கியில் ராஜீவ் பதுக்கி வைத்திருக்கின்றார் என்று அந்தக் கட்டுரையில் பகிரங்கமாகக் கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு ஏதோ போகிற போக்கில் கூறப்பட்டதல்ல. குற்றச்சாட்டைக் கூறிய ஸ்வீசர் பத்திரிகையும் சாதாரணமானதல்ல. 2.15 இலட்சம் பிரதிகள் விற்கும் 9.17 இலட்சம் வாசகர்களைக் கொண்ட பிரபலமான பத்திரிகை. சுவிற்சர்லாந்தில் ஆறிலொரு பங்கினர் இதை வாசிப்பதாகப் புள்ளிவிபரம் இருக்கிறது. இப்படித் தரமான ஒரு பத்திரிகைதான் ராஜீவ் மீதும் சோனியா மீதும் ஆதாரத்துடன் குற்றம் சாட்டியது.

ரஷ்யாவின் உளவு அமைப்பான கேஜிபியின் ஆவணங்களை மேற்கோள் காட்டி, 'இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா இரகசிய வங்கிக் கணக்கில் 2.5 பில்லியன் சுவிஸ் பிராங் (2.2 பில்லியன் அமெரிக்க டொலர்) பணத்தை மைனரான தனது மகனின் பெயரில் வைத்திருக்கிறார்' என்று ஸ்வீசர் கூறியது. அந்த வகையில் பார்த்தால், ராகுலுக்கு 18 வயது பூர்த்தியாகும் முன்பே, அதாவது 1988ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்பே, இந்த 2.2 பில்லியன் டொலர் வங்கிக் கணக்குத் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பணம் இந்திய மதிப்பில் 10 ஆயிரம் கோடி ரூபாவிற்குச் சமம்.

வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை ஸ்விஸ் வங்கிகள் அப்படியே முடக்கி வைப்பதில்லை. வாடிக்கையாளர்களின் சார்பில் பல்வேறு வகைகளில் அந்தப் பணம் வங்கியால் முதலீடு செய்யப்படுவது வழக்கம். நீண்டகாலப் பங்குப் பத்திரங்களில் அந்த லஞ்சப் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தால், 2009ஆம் ஆண்டில் அந்தப் பணம் 42 ஆயிரத்து 345 கோடி ரூபாவாகப் பெருகியிருக்கும். அமெரிக்கப் பங்குகளில் முதலீடு செய்திருந்தால் 58 ஆயிரத்து 365 கோடி ரூபாவாக வளர்ந்திருக்கும். இரண்டிலும் சரிபாதி என்ற வகையில் முதலீடு செய்திருந்தால் 50 ஆயிரத்து 355 கோடி ரூபாவாக இருக்கும்.

இந்தப் பணத்தை 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார மந்தத்துக்கு முன்பு எடுத்திருந்தால் ரூ.83



ஆயிரத்து 900 கோடி கிடைத்திருக்கும். இதில் எந்த வகையில் கணக்கிட்டாலும் சோனியாவின் குடும்பத்துக்கு ரூ.43 ஆயிரம் கோடியிலிருந்து ரூ. 84 ஆயிரம் கோடிக்குள் ஏதோ ஒரு அளவில் பெரும் பணம் இருக்கிறது என்பது மட்டும் தெளிவு.

### கே.ஜி.பி ஆவணங்கள்

சோனியா மீதான இரண்டாவது ஆதாரபூர்வமான குற்றச்சாட்டு இன்னும் கடுமையானது. யெவ்ஜீனியா அல்பேட்ஸ் என்கிற ரஷ்யப் புலனாய்வு எழுத்தாளர் எழுதிய 'தி ஸ்டேட் வித் இன் ஏ ஸ்டேட் : தி கேஜிபி அண்ட் இட்ஸ் ஹோல்ட் ஆன் ரஷியா-பாஸ்ட், பிறசன்ட், ப்யூச்சர்' என்ற புத்தகத்தில் இந்தக் கடுமையான குற்றச்சாட்டுகள் இடம்பெற்றிருந்தன.

'அரசியல் காரணங்களுக்காக கேஜிபியிடம் இருந்து நேரு குடும்பம், அதாவது ராஜீவ் காந்தியின் குடும்பம்



லஞ்சம் பெற்றது' என்று அந்தப் புத்தகத்தில் அல்பேட்ஸ் கூறியிருக்கிறார்.

கேஜிபி ஆவணங்களை மேற்கோள் காட்டி அந்தப் புத்தகத்தில் வரும் ஒரு செய்தி: 1982ஆம் ஆண்டில் கேஜிபி தலைவராகப் பொறுப்பேற்ற விக்டர் செப்ரிகோவ் கையெழுத்திட்டிருக்கும் கடிதம் ஒன்றில் 'இந்தியப்பிரதமர் இந்திராகாந்தியின் மகனுடன் சோவியத் யூனியனின் கேஜிபி, நெருக்கமான தொடர்பைக்கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனின் வர்த்தக அமைப்புகள், பிரதமர் குடும்பத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வணிக நிறுவனங்களுக்கு அளித்த வாய்ப்புக்கள் மூலம் கிடைத்த நன்மைகள் குறித்து ஆர்.காந்தி மகிழ்ச்சி தெரிவித்தார். இந்தவகையில் கிடைத்த பணத்தை ஆர்.காந்தியின் கட்சிக்காக பயன்படுத்துவதாக அவர் இரகசியமாக தெரிவித்திருக்கிறார்.' இன்னொன்றையும் அல்பேட்ஸ் அம்பலப்படுத்தியிருக்கிறார். *(தொடரும்)*

நன்றி: தினமணி

# ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு எதிராக புலம் பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூன் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சிறப்புரை ஆற்றியுள்ளார்.

இதன் போது புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் வெளியில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பான் கீ மூனுக்கு எதிரான பதாதைகள் ஒட்டிய வாகனங்கள் சுற்றித் திரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பான் கீ மூனின் உருவம் பொறிக்கப்பட்டு அதன் கீழ் தாம் இரண்டாம் தவணை பதவிக்காக போட்டியிடுவதாகவும் இலங்கையில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் தாம் எதனையும் செய்யவில்லை எனவும் நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள் எனும் வாசகங்கள் அடங்கிய சுலோகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளுடன் இந்த ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டையில் நீலநிற முட்டையிடும் கோழி

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் கோழியொன்று தொடர்ச்சியாக நீலவர்ண முட்டையிடும் ஆச்சரியமொன்றை நிகழ்த்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டையின் மெத்தேவல பிரதேசத்திலுள்ள கோழிப்பண்ணையொன்றில் இருக்கும் கோழியொன்றே நாளாந்தம் இளம் நீல வர்ணத்தில் முட்டையிடுகிறது.

அக்கோழியின் உரிமையாளர் ஏ.எல்.எம்.அஸ்வத் குறிப்பிடுகையில், அக்கோழியும் ஏனைய கோழிகள் போன்றே அனைத்து விடயங்களிலும் நடந்து கொண்டாலும், முட்டையிடும் போது மட்டும் அது இளநீல வர்ணத்தில் தொடர்ச்சியாக முட்டையிட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தை முற்று முழுதாக நீலவர்ணமாக மாற்றும் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையாக மாற்றும்) ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரஸ்தாப கோழி இளநீல வர்ண முட்டையிட்டு வருவதாக பிரதேச வாசிகள் நகைச்சுவையாகப் பேசிக்கொள்கின்றனர். (ஸ்ரீ-2)

# பேடன் பவல் பிரபுத்தினப் போட்டிகள்

(அல்வாய்)

இலங்கை சாரணர் சங்கம் பருத்தித்துறை மாவட்டத்தினால் சாரணர் தந்தை பேடன் பவல் பிரபுத்தினப் போட்டிகள் பிரதேச ரீதியாகவும் மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்படவுள்ளன.

இதில் பொது அறிவுப் போட்டி எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை பிரதேச ரீதியாக நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் சகல சாரணர், பெண் சாரணர், குருளைச் சாரணர்கள் கட்டாயமாகப் பங்கு பற்றவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுப் போட்டியில் பாடசாலையில் இருந்து ஒவ்வொரு பிரிவுக்கும் இருவர் வீதம் பங்குபற்றலாம்.

மேற்படி போட்டியில் குருளைச் சாரணர் பிரிவு I இல் 7 வயது தொடக்கம் 9 வயது வரையுள்ள மாணவர்கள் பங்குபற்ற முடியும். "குருளையர் நாம்" எனும் தலைப்பில் 3 நிமிடம் தொடக்கம் 5 நிமிடம் வரை பேச்சு அமைதல் வேண்டும்

குருளைச்சாரணர் பிரிவு II இல் 10 வயது தொடக்கம் வயது 11 வரையுள்ள மாணவர்கள் பங்குபற்ற முடியும் "பேடன் பவல்" எனும் தலைப்பில் 4 நிமிடம் தொடக்கம் 5 நிமிடம் வரை பேச்சு அமைதல் வேண்டும்.

சாரணர் பிரிவு I இற்குரியோர் (12 வயது தொடக்கம் 15 வயது வரையுள்ளோர்) "சாரணியம்" எனும் தலைப்பிலும் சாரணர் பிரிவு II இற்குரியோர் (16 வயது தொடக்கம் 18 வயது வரையுள்ளோர்) "சாரணிய தலைமைத்துவம்" எனும் தலைப்பில் 5 நிமிடம் தொடக்கம் 6 நிமிடம் வரை பேசுதல் வேண்டும். திரி சாரணர் (19 வயது தொடக்கம் 24 வயது வரை) "தலைமைத்துவமும் நாமும்" என்ற தலைப்பில் 5 நிமிடம் தொடக்கம் 6 நிமிடம் வரை பேசுதல் வேண்டும். குழுப் போட்டிகளில் 6 பேர் தொடக்கம் 8 பேர் வரை பங்கு பற்ற முடியும்.

குருளைச்சாரணர் பிரிவு I இற்கான குழு நிகழ்ச்சியான கும்மி 3 நிமிடம் தொடக்கம் 7 நிமிடம் வரையும் குருளைச் சாரணர் பிரிவு II இற்கான குழு நிகழ்ச்சியான கோலாட்டம் 4 நிமிடம் தொடக்கம் 6 நிமிடம் வரையும் அமைதல் வேண்டும்.

சாரணர் பிரிவு I, II இற்கான கிராமிய நிகழ்ச்சி 5 நிமிடம் தொடக்கம் 7 நிமிடம் வரை அமைதல் வேண்டும். கட்டுரைப் போட்டியில் குருளைச்சாரணர் பிரிவு I இற்கு "சாரணியத் தந்தை", குருளைச் சாரணர் பிரிவு II இற்கு "மௌக்கியின் கதை" ஆகிய தலைப்புகளில் அமைதல் வேண்டும். 30 நிமிடம் வழங்கப்படும்.

சாரணர் பிரிவு I இற்கு "சாரணியமும் நாமும்", சாரணர் பிரிவு II இற்கு "சாரணியமும் சமூகப் பண்பும்", திரிசாரணர் பிரிவிற்கு "நாம் சேவை செய்வோம்", சாரணத் தலைவர் பிரிவிற்கு "தலைவரின் பங்கு" ஆகிய தலைப்புக்கள் வழங்கப்படும். இதற்கு 1 மணித்தியாலம் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தேவையானவர்கள் பருத்தித்துறை சாரணர் ஆணையாளர் செ. இரவீந்தன், வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் மாவட்ட சாரணர் ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-3-19)



உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையை முன்னிட்டு இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் நேற்று முன்தினம் சென்ஜோன்ஸ் மத்திய கல்லூரியில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பை இலங்கை உதைபந்தாட்ட மத்திய உறுப்பினர் ஒருவர் நடத்துவதை படத்தில் காணலாம்.

# படகு கவிழ்ந்ததில் ஐவரை காணவில்லை

வெள்ளம் காரணமாக சிற்றாறு கல்லாறு பகுதியிலிருந்து கடற்படையினரின் உதவியுடன் பொதுமக்களை ஏற்றி வந்த படகொன்று நேற்று முன்தினம் கவிழ்ந்ததில் 5 பேர் காணாமல் போயுள்ளனர். குறித்த படகில் 22 பொது மக்கள் பயணித்துள்ளதாகவும் காணாமல் போனவர்களில் பெண்ணொருவரும் ஆணொருவரும் கடற்படை வீரர் ஒருவரும் இரு சிறுவர்களும் அடங்குவதாக கந்தளாய் பொலிஸ் நிலைய இரகசியப் பொலிஸ் பிரிவு தெரிவித்தது.

இவர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# வெள்ள அனர்த்தங்களுக்கென 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வெள்ள அனர்த்தங்களுக்காக அரசு 100 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு துரிதமாக செயற்படும் விதத்தில் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. வெள்ள அனர்த்தங்களினால் நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் சுமார் முப்பதாயிரம் பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

யாழ்ப்பாணம் மாநகரசபை
சந்தைக்குத்தகை அறவீடு தொடர்பான
பொது அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சகல சந்தைகளினுள்ளும் விற் பனைக்காக கொண்டு வரப்படும் சகல விற்பனைப் பொருட்களின் பெறுமதியின் 4% வீதத்தினை 01.01.2011 முதல் குத்தகைப் பணமாக செலுத்த வேண்டுமென மாநகரசபை தீர்மானித்துள்ளது.

மேற்படி தீர்மானத்தினை அனைவரும் ஏற்று அதனை நடைமுறைப் படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி.யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(சி-2346)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

பளைப்பிரதேச மக்களின் நலன்கருதி
இலங்கை வங்கியின் புதிய விரிவாக்கற் கிளை
(பளை பஸ் நிலையம் முன்பாக)

07.02.2011 திங்கள் காலை 9 மணியளவில் இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர்
திரு.வீ.சி.சிவநாதன் மற்றும் சாவகச்சேரி கிளை முகாமையாளர் திரு.எஸ்.சந்திரகுமார் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படும்.
வாடிக்கையாளர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இலங்கை வங்கி, சாவகச்சேரி.

(சி-2341)




# ஆடுகளம் பார்த்தேன்



நீண்டகால இடைவெளிக்குப் பின் யாழ்ப்பாணம் செல்லா திரையரங்கில் ‘ஆடுகளம்’ எனும் படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தைப் பார்த்ததும் முப்பத்தைந்து ஆண்டு கால நினைவுகள் என்நினைவுத் திரையில் நிழலாடின.

எனது நண்பரும் ஒரு சாலை மாணாக்கரும் உறவினருமான கவிஞர்



ஜெயபாலன்

வ.ஐ.ச. ஜெயாபாலன் இந்தப் படத்திலே தனுஷ் உடன் இணைந்து முக்கியபாத்திரத்தில் நடித்துள்ளார்.

மதுரை மாவட்டத்திலே ஒரு கிராமத்தில் ஒரு காலத்தில் நடைபெற்ற கோழிச்சண்டையை (சேவற்சண்டையை) மையமாகவைத்துப் பின்னப்பட்ட கதையிலே பரம்பரை பரம்பரையாகக் கோழிச் சண்டையை நடத்தி வரும் பேட்டையாராக இலங்கையைச் சேர்ந்த கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் மிகச்சிறப்பாக நடித்துள்ளார். அவரது தோற்றம் அந்தப்பாத்திரத்திற்கு உயிர் கொடுத்துள்ளது.

அசல்கிராமத்தவனாக, கிராமத்து ஆளுமைகள் நிரம்பிய தலைமைப் பாத்திரமாகப் படம் முழுவதும் பவனி வரும் ஜெயபாலனும் கதாநாயகனாக நடிக்கும் தனுஷும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியை-காலனித்துவகாலக் கிராமிய வாழ்வியலை நம் கண்முன்கொண்டு வருகின்றனர்.

தனுஷ் தவிரப் பெரும்பாலும் மற்றவர்கள் புதுமுகங்களே. இந்தோ ஆங்கிலக் கிறிஸ்தவப் பெண்ணான கதாநாயகி, அவரது வீட்டுச் சூழல், மொழி, சடங்குகள் முதலானவை காலனித்துவ வாழ்வியலின் ஒரு கூறு எங்கள் கிராமங்களிலே எவ்வாறு எஞ்சி இருந்தது என்பதைப்படம் சிறப்பாகக் காட்டுகின்றது. “வெள்ளாவியில் வைத்து வெளுத்ததோ, வெய்யிலைக்காட்டாமல் வளர்த்ததோ” என்றபாடல் நன்றாகவும் மிகப் பொருத்தமாகவும் இருக்கின்றது. தனுஷ் சற்றுவித்தியாசமாக நடித்துள்ளார். அவரது வளர்ச்சியும் முதிர்ச்சியும் இப்படத்திலே தெளிவாகத் தெரிகின்றது.

பேட்டையாராக நடிக்கும் ஜெயபாலனை தனுஸ் அண்ணே! அண்ணே! என்று குழைந்து குழைந்து பழகுவதும் அதற்கேற்ப முகபாவமும் தோற்றமும் கிராமத்து உறவுநிலையை யதார்த்தமாகப் புலப்படுத்துகின்றது.

ஆங்கிலம் பேசும் கதாநாயகியை காதலிக்கும் தனுஸ் அவளின் மொழி விளங்காமல் கஸ்ரப்படும் இடம் மிகப் பிரமாதமாக இருக்கின்றது. மெய்ப்பாடு என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடும் ‘உடல் மொழியை’ தனுஷ் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலே எழுதப்பட்ட நாவல்களில், குறிப்பாக இலங்கைத் தமிழ் நாவல்களில், காலனித்துவ படோடபத்தில், கிறிஸ்தவச் சூழலில் வாழும் அழகான பெண்களை கிராமத்து அப்பாவி இளைஞர்கள் விரும்புவதாக சித்தரிக்கப் பட்டுள்ளமை ஆடுகளம் படத்தைப் பாக்கும்போது என் நினைவில் ஒருகணம் பட்டுத் தெறித்தது.

படத்தின் ஆரம்பத்திலே மதிப்பார்ந்த பாத்திரமாக தோன்றிய ஜெயபாலன் கதையின் பிற்பாதியிலே வில்லனாக மாறுகின்றார். பேட்டையாரின் சொல்லைக் கேளாது அவரின் கருத்தை அசட்டை செய்து கோழிச் சண்டைப் போட்டியிலே தனுஷ் ஈடுபடுவதும், தொடர்ந்து போட்டிகளில் பங்கு பற்றுவதும் ஜெயபாலனுக்கு (பேட்டையாருக்கு) பிடிக்கவில்லை.

பேட்டையாரின் ஈகோவும் தனுஷின் ஈகோவும் வெளிப்படும் வகையிலே கதையைப் பின்னி அதைச் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார்கள். இயக்குநரின் சிறப்பாற்றல் படம் முழுவதும் வெளிப்படுகின்றது. சிறப்பாக இருவரினதும் “ஈகோ” தான் (தன் முனைப்பு) கதையின் மையமாகின்றது. இந்த மையப் பொருளைக் கையாள்வதில் இயக்குநர் பெரு வெற்றி பெற்றுள்ளார்.

சண்டைச் சேவலை பேட்டையாரிடம் பணங்கொடுத்து ஏமாற்றி வாங்க வந்தவனின் கையிலிருந்து சேவலைப் பறித்தெடுத்த பேட்டையார், அந்தச் சேவலை அடித்துக் கொல்லும் காட்சி அற்புதமாகவும் யதார்த்தமாகவும் இருக்கின்றது. இந்தக் காட்சியிலே ஜெயபாலனின் முரட்டுச் சுபாவமான ஆணவம்சார் தன் முனைப்பான நடிப்பு துல்லியமாகப் படமாக்கப்பட்டிருக்கிறது.

கோழிச்சண்டைப் போட்டிப் பாரம்பரியம் பெரும்பாலும் மறைந்துவிட்ட நிலையில் இதனை கலாபூர்வமாக ஆவணப்படுத்தி இன்றைய இளைய தலைமுறைக்கு காட்ட முனைந்த இயக்குநர் நிச்சயம் பாராட்டுக்குரியவர். இலங்கையிலேயே யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற கோழிச்சண்டைப் போட்டி பற்றி கே.டானியல் தனது “அடிமைகள்” என்ற நாவலில் விபரமாக குறிப்பிட்டுள்ளமையை ஆடுகளம் எனக்கு நினைவுபடுத்தியது.

இலங்கையிலேயே நெடுந்தீவிலே பிறந்து வன்னிக் கிராமத்திலே வளர்ந்த கவிஞர் ஜெயபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் சிறப்புப் பட்டதாரி ஆவார். பல்கலைக் கழக மாணவனாக இருக்கும் காலத்தில் மாணவர் அவைத் தலைவருக்கான போட்டியிலே களமிறங்கி, அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்று மாணவர் அவைத் தலைவராகிச் சிறப்பாகப் பணியாற்றியவர்.


நமது ஒரு சாலை மாணாக்கனாகிய ஜெயபாலனைத் திரையிலே “பேட்டையாராகப்” பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த மகிழ்ச்சியே ஆடுகளம் பற்றிய குறிப்பினை எழுதத் தூண்டியது. தனுஸ் ஜெயபாலனைச் சைக்கிளில் ஏற்றி ஓடும் காட்சியைப் பார்த்தபோது 35 ஆண்டுகளுக்குமுன் நான் ஜெயபாலனை சைக்கிளில் ஏற்றி பலாலி வீதியில் ஓடிய நினைவு என் நெஞ்சத் திரையில் நிழலாடியது.

பல்கலைக்கழக மாணவர் அவைத்



தலைவராக ஜெயபாலன் இருந்த காலத்திலே, துணைவேந்தர், பீடாதிபதிகள், நிர்வாக அதிகாரிகள் முதலானோருடன் முரண்படுவது, கோவிப்பது, உணர்ச்சி வசப்படுவது முதலான காட்சிகளை நேரிலே பார்த்துள்ளேன்.

படத்திலே பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரியுடன் முரண்பட்டு




சத்தமிட்டு சுதமிடும் காட்சியைப் பார்த்த போது அந்தப் பழைய நினைவு மீண்டும் என்னுள் தலை காட்டியது.

பேராசிரியர் க.கைலாசபதி ஒரு முறை ஜெயபாலனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது “ஒரு முரடன் ஆனால் நல்ல கவிஞன்” என்று கூறிய கூற்றினைப் படம் பார்க்கும் போது நினைந்துகொண்டேன்.

ஜெயபாலன் நல்லதோர் கவிஞன். இவனின் கவிதைகள் இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் வெளியிட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்களிலும் இடம்பெற்றுள்ளன. கவிஞர் வைரமுத்து தொகுத்த “எல்லா நதியிலும் என் ஓடம்” என்னும் கவிதைத் தொகுதியிலும் ஜெயபாலனின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஜெயபாலன் நல்ல கவிஞன் மாத்திரமல்ல சிறந்த ஆய்வாளரும் கூட அவ்வப்போது நல்ல கதைகளும் எழுதியுள்ளார். பல்பரிமான ஆளுமை கொண்ட ஜெயபாலன் தென்னிந்திய திரைப் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளமை எமக்குப் பெருமை சேர்க்கும் விடையம் எனலாம்.

**பேராசிரியர்**
**எஸ்.சிவலிங்கராஜா**
**யாழ்.பல்கலைக்கழகம்**







புனித. பத்திரிசியார் கல்லூரியின் புதிய கூடைப்பந்தாட்டத் திடல் திறப்புவிழா கல்லூரி அதிபர் வண.பிதா ஜெறேம் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பிரிகேடியர் யூ.சு.டேவிட் மற்றும் அவரது பாரியார் பேர்ல்லி டேவிட் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் நினைவுக்கல்லை பிரதம விருந்தினர் திறந்து வைப்பதையும் புதிய திடலில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப்போட்டியில் மோதிய புனித. பத்திரிசியார் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிவீரர்களுடன்

# தேசிய பிரச்சினை தொடர்பில் அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ வலியுறுத்து

(கொழும்பு)


தேசிய பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டமூலம் உள்ளிட்ட நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவு படுத்தப்பட்டால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காத்திரமாக முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களுக்கு அரசாங்கத்தின் உறுதியான கொள்கைகள் மிகவும் முக்கியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதேசத்தில் எந்த சமூகம் பெரும்பான்மையாக வாழ்கின்றதோ அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேர்தல் கடமைகளில் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இவ்வாறான நிலைமை காணப்பட்டிருந்.தால் விருப்பு வாக்கு இலக்கம் வெளியிடுதல் போன்ற பிரச்சினைகள் எழுந்திருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அனைவரும் இரண்டாம் மொழியை கற்பதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஏனையவர்கள் மொழியைக் கற்குமாறு கோருவதற்கு முன்னர் நாம் இரண்டு மொழிகளை தெரிந்திருப்பது அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# தெற்கில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

தெற்கில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இரவு மற்றும் அதிகாலை வேளையில் தெற்கிற்கு மேற்கொள்ளும் பயணங்கள் தொடர்பில் மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திருடர்கள் மற்றும் பாலியல் குற்றவாளிகளின் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் இரவு மற்றும் அதிகாலை வேளையில் கடத்தல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அல்பிட்டிய பிரதேசத்தில் தனியார் வகுப்புக்குச் சென்ற மாணவிகள் கடத்தப்பட்ட சம்பவத்தை மக்கள் உதாரணமாகக் கொள்ள வேண்டுமென பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

பாடசாலை மாணவிகளை இலக்கு வைத்து சில குற்றவாளிகள் வன்முறைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான சம்பவங்கள் குறித்து பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான த.செந்திநாதன் மற்றும் திருமதி கலாவதி செந்திநாதன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் யாழ். கல்வி வலய கணித பாட ஆசிரிய ஆலோசகருமான கு.விஜயகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஸ்ரீ)

# பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள இளவாலை வடமேற்கு கிராமசேவகர் ஜே/222 பிரிவிலுள்ள வசந்தபுரம் பாரதி சனசமூக நிலையம், வசந்த முருகன் ஆலய பரிபாலனசபை விளையாட்டுக் கழகம் என்பவற்றிற்கான புதிய நிர்வாக சபைகள் தெரிவு செய்வதற்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வசந்தபுரம் பாரதி நூலக முன்றலில் பாரதி சனசமூக நிலையத்தின் செயலாளரும் பதில் தலைவருமான க.சுதாகரன் தலைமையின் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வசந்தபுரம் கிராம மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் உடனடித் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் உடனடித்தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அனர்த்த பாதுகாப்பு கல்வித்திட்டத்தின் பணிப்பாளர் இசாட் தாஜுதீன் தெரிவித்தார்.

இந்நடவடிக்கை தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள பல பாடசாலைகள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளன.

இவ்வாறு பாதிப்படைந்த பாடசாலைகளுக்கு தேவைப்படும் உடனடித் தேவைகளை வழங்குவதற்கு யுனிசெப்,சேவ் த சில்ரன் மற்றும் இதர தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முன்வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் பொருட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை சுத்தப்படுத்துவதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 2ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைக் கிணறுகளை சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையிலும் குடிநீர் போத்தல்களை வழங்கவும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கவும் யுனிசெப் அமைப்பு முன்வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவற்றுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் சேவ் த சில்ரன் அமைப்பினால் தைத்த சீருடைகளும் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாடசாலைகளிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் இது தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்று மட்டக்களப்பில் உள்ள யுனிசெப் அமைப்பின் கிழக்குப்பிராந்திய காரியாலயத்தில் நடைபெற்றதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# யொகோவின் சாட்சிகளின் விசேட மாநாடு

யொகோவின் சாட்சிகள் சபையினால் ''யொகோவாவிடம் தஞ்சமடையுங்கள்'' எனும் தொனிப்பொருளிலான ஒரு நாள் விசேட மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.40 மணிக்கு யாழ் .வீரசிங்கம் மண்ட பத்தில்.நடைபெறவுள்ளது.

இதில் முற்பகல் 11.35 மணிக்கு முழக்காட்டுதல் பேச்சும் ''நமது ஆன்மீக பூஞ்சோலை யொகோவா அளிக்கும் புகலிடம்'' என்ற பேச்சும் இடம்பெறும். தொடர்ந்து காவற்கோபுரச் சுருக்கமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

# மாதகல் புனித லூர்து அன்னையின் திருவிழா

மாதகல் புனித லூர்து அன்னையின் நவநாள் நேற்று ஆரம்பமானது. இதில் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 6 மணிக்கு அன்னையின் தேர்ப்பவனியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்று மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி இடம் பெறும். (ஸ்ரீ)






கிளி/முருகானந்த மகாவித்தியாலயத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 105 வறிய மாணவர்களுக்கு சுவிஸ் சைவத்தமிழ் சிவன் கோவிலின் அனுசரணையுடன் அண்மையில் காலணிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாணவருக்கு காலணி வழங்குவதையும் அருகில் அதிபர் ரி. வரதன் நிற்பதையும் அவற்றைப்பெற்றுக்கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

13-IX

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



வாழைக்கிழங்கினுள்ளே அல்லது வாழையின் (போலித்) தண்டினுள்ளே ஒருவாறு உட்புகுந்து விடும் பியூசேரியம் பூஞ்சணம் அழுகல் வளரியாக இருப்பதனால் தனது வேலையை மெல்ல மெல்ல ஆரம்பித்து விடும். இப்பூஞ்சணத்தினால் விரைந்துருவாக்கப்படும் பூஞ்சணவிழையங்களும் இலிங்கமில் வித்திகளும் (Conidia) வாழைக்கிழங்கினுள்ளும் போலித் தண்டினுள்ளும் உள்ள நீர் கடத்தலில் ஈடுபடும் கலன் கட்டிலுள்ள காழ் கலன்களை அடைத்துவிடுகின்றன. இதனால் மண்ணிலிருந்து வேரினூடாக அகத்துறிஞ்சப்படும் நீர் தரை மேல்பகுதியிலுள்ள இலை, தண்டு மற்றும் ஏனைய பாகங்களுக்கு மேல் நோக்கி கடத்தப்படுவது தடைப்படும்.ஆனாலும் ஆவியுயிர்ப்பு செயன் முறையினால் தாவர மேற்பகுதியிலிருந்து குறிப்பாக இலைப்பகுதியிலிருந்து இழக்கப்படும் நீருக்கு கீழிருந்து நீர் பெறப்பட முடியாத நிலையில் நீர் சமனநிலை குழம்பி விட இலைப்பகுதி வாடத் தொடங்கி விடும்.

மண்ணில் வேண்டியளவு நீரிருந்தும் நீர் கடத்தப்படும் தொகுதியில் கடத்தல் தடைப்படுவதனால் வாழையின் இலைப்பகுதியில் வாடலை காணலாம்.

வாடும்போது முதிர்ந்த இலைகளிலிருந்து குருத்து நோக்கியதாக இவ்வாடல் மெல்ல மெல்ல அதிகரிக்கும். அதிலும் வாழையிலை தண்டுப்பகுதி நொய்தலாகி வாழையிலையின் பாரத்தை தாங்க முடியாமல் அந்த இடத்திலேயே முறிந்துவிடும். இப்படியாக சுருண்டபடியே விரியாதிருக்கும். குருத்துப் பகுதியைத் தவிர ஏனைய இலைகளனைத்தும் இலைத்தண்டு பகுதியில் முறிவடைந்து தொங்கிக் கொண்டிருக்கும். இந்த அறிகுறி பியூசேரியம் பூஞ்சணத் தொற்றினை இலகுவில் வெளிக்காட்டி விடும்.



New leaves are stunted and bunchy.
Leaf edges are deformed & yellow.



Meloidogyne nematode

இந்நோய் தொற்று முற்றும்போது முறிவடைந்த இலைகள் பழுப்பு நிறமாவதுடன் அவற்றினது இயற்கையான பச்சை நிறத்தை இழக்க ஆரம்பித்துவிடும்.பச்சை நிறத்தையிழந்து சோபையிழந்திருக்கும் வாழை மரத்தில் குருத்து மட்டும் எதுவித பாதிப்பையும் வெளிக்காட்டாது அப்படியே நேராக இருக்கும். நோயின் தன்மை தீவிரமடையும் போது போலித்தண்டில் வெடிப்பு ஏற்பட்டு கிழிதல் தோன்றும். இதுவும் மேலுள்ள பாரத்தை தாங்கமுடியாததால் வந்த விளைவாகும். இந்தநிலையில் வாழைமரம் முற்றுமுழுதாக ஆட்கொள்ளப்பட்டுவிடும்.

### அழுகல் ஆரம்பிக்கும் தருணமிது

வாழைமரத்தினது அனைத்துப் பகுதிகளிலும் நீர்த் தேவை அதிகரித்த நிலையிலும் வாடலின் தாக்கம் வீரியமடைந்திருக்கும் நிலையிலும் கிழங்குப் பகுதியில் அழுகல் ஏற்பட ஆரம்பிக்கும். இவ்வழுகல் கிழங்குப் பகுதி முழுக்க பரவலடைந்து பின்னர் (போலித்) தண்டினுள் ஏற்பட்டு விடும். இதன் விளைவாக வேர்கள், வேர்மயிர்கள் என்பனவற்றில் அழுகல் ஏற்பட்டு அவை இறந்துவிடும். இதனால் வாழை மரத்தினடியிலிருந்து துர்நாற்றம் வீசத்தொடங்கும். அழுகலின் தாக்கத்தினால் வாழைக்குலை வெளிவருதலும், வெளிவந்திருந்தால் அதனது வளர்ச்சியும் தடைப்பட்டும் காணப்படும்.

ஒட்டுமொத்தமாகவே வாழையில் ஏற்படும் அழுகலினால் அனைத்துப் பகுதிகளுமே பாதிக்கப்பட்டு இறுதியில் இவ்வாறு பாதிக்கப்பட்ட வாழையினை அதன் கிழங்கு, போலித்தண்டு,வாழைக்குட்டிகள் என முழுவதுமாக மண்ணிலிருந்து பெயர்த்தெடுத்து தோட்டத்தினொரு மூலையில் ஆழக் கிடங்கு வெட்டி அதனுள் இட்டு முழுவதுமாக எரித்து விட வேண்டும். பாதிக்கப்பட்ட வாழையின் எந்த மீதியையும் மண்ணில் விட்டுவைத்தால் அது பியூசேரியம் பூஞ்சணம் விரைந்து பெருகும் ஊடகமாக அமைந்துவிடும். மேலே குறிப்பிட்டவாறு அழுகலேற்பட பியூசேரியம் பூஞ்சணமும் அதிகளவிலான வெவ்வேறு அளவிலான இலிங்கமில் வித்திகளை (Macro conidia மற்றும் Micro conidia) பெருக்கிவிடும். இவ்வித்திகளுடன் சேர்த்து கிளாமிடோஸ்போர் (Chlamydospore) எனும் பூஞ்சணத்தினது கலம் திரிபடைந்து உருவாகிய வித்தியும் உருவாகும். பூஞ்சண விழை கூட பல்கிப் பெருகும். பொறிமுறைக்கு தன்னை இசைவாக்கி தகாத சூழலில் உறங்குநிலையிலிருக்கும் Dormant mycelium ஆக உருமாறி தக்கன பிழைக்க உதவிடும்.

(தொடரும்)

# பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் 5ஆயிரம் ரூபா தாள் அறிமுகம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

5ஆயிரம் ரூபா நாணயத்தாள் அறிமுகமானது பொருளாதார பின்னடைவை பறைசாற்றி நிற்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அதிகரித்துச் செல்லும் பணவீக்க வீதத்தைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால், அரசாங்கம் புதிய 5ஆயிரம் ரூபா நாணயத்தாளை அறிமுகப்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகால யுத்தத்தை வெற்றிகொண்டமை பாராட்டுக்குரியது என்றபோதிலும், பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார யுத்தத்தை வென்றெடுப்பதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் வெளிப்படுத்தும் நோக்கில் சுதந்திர தினத்தை முன்னிட்டு புதிய நாணயத்தாள்கள் வெளியிடப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், புதிய நாணயத் தாள் வெளியீடானது ஆரோக்கியமான பொருளாதார நிலைமையாக கருதப்படமுடியாது எனவும் கடந்த 2004 ஆம் ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி 111ஆகக் காணப்பட்டதாகவும், இவ் ஆண்டில் 231 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலத்தில் பொருட்கள் சேவைகளுக்காக ஒருவர் 2ஆயிரத்து 415 ரூபாவை செலவிட்டிருந்ததாகவும் இன்று 5ஆயிரம் ரூபா செல விட நேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஓய்வூதியம் வழங்காது படையினரை பணிநீக்கம் செய்யும் திட்டமில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியம் வழங்காது படையினரை பணி நீக்கம் செய்யும் உத்தேசம் கிடையாது என இராணுவப் பேச்சாளர் உபயமெதவல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 22ஆண்டுகள் சேவையாற்றியவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் நன்மை அடையமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, படை அதிகாரிகள் மற்றும் படை வீரர்கள் உள்ளிட்ட 60 ஆயிரம் பேரை பணிநீக்கம் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் உள்ளிட்ட நலத் திட்டங்களை வழங்காது படையினரை பணிநீக்கம் செய்ய முயற்சி நடைபெறுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். யுத்த காலத்தில் சேவையாற்றிய பலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)






இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சுதந்திர தினத்தில் பிறந்த குழந்தைகளுக்கு மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையினால் வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு பரிசுப் பொதியும் வழங்கப்பட்டது. இதில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, மக்கள் வங்கியின் பிராந்தியத் தலைமைக் காரியாலய அதிகாரி திருமதி சூரியகுமார் ஆகியோர் பரிசுப் பொதி வழங்குவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# கோபத்தைக் கொன்றுவிடு!

மரமோ, செடியோ வண்டோ, பூச்சியோ... அடுத்தவர்களை மாற்றிவிடத் திட்டம் போட்டுக் கொண்டிருப்பதில்லை. ஆனால், அவை தங்கள் இயல்புப்படி முழுமையாகச் செயலாற்றுகின்றன.

ஆனால், மனிதன் மட்டும்தான் தன் கொள்கைகளை சுற்றியிருப்பவர்கள் மீது திணிக்க முற்படுகின்றான். அதற்கு இணங்காதவர்களுடன் அவனுடைய போராட்டம் ஆரம்பமாகிவிடுகின்றது.



உங்களுக்குப் பிடிக்காத காரியங்களை மற்றவர்கள் செய்யும்போது, உங்களால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை.

உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பொறுத்து, அவர்களைக் கோபிப்பீர்கள்... மிரட்டுவீர்கள்..சில சமயத்தில், தண்டனை ஏதாவது கொடுப்பீர்கள். இது உங்களுக்கும் அடுத்தவருக்கும் இடையில் பற்றவைத்த திரியாக மாறிவிடும்.

உங்கள் கோபம் ஒரு பாறையின் மீது இருக்கலாம். கடவுளின் மீது இருக்கலாம். நண்பர் மீது இருக்கலாம். குருவின் மீது இருக்கலாம்.

மற்றவர்களால்தானே உங்களுக்குக் கோபம் வருவதாக நினைக்கிறீர்கள்? ஆனால், கோபம் என்ற குணம் யாருடையது? அது எங்கே உற்பத்தியாகிறது? வெளியிலா?

இல்லை. அது உங்களுக்குள்தான் வேர் பிடித்திருக்கிறது. அதை நீங்களாகத்தான் உங்களுக்குள் கொண்டுவந்தீர்கள்.

உங்கள் கோபத்தை ஒரு சக்தியென்று தவறாக நினைத்தீர்கள். அதன்மூலம் எதையோ சாதிக்க முடியுமென்று அதையொரு கருவியாக்கிக் கொண்டீர்கள்.

ஆனால், அந்தக் கருவியை அடுத்தவர் மீது ஏவும்போது, அவர் மீது ஏற்படுத்தும் பாதிப்பைவிட, உங்களுக்கு அல்லவா அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது? கோபமாய் இருக்கும்போது புத்தி தாறுமாறாக அல்லவா வேலை செய்கிறது? முடிவு மோசமாக அல்லவா மாறிப் போகிறது?

ஒரு ரோஜாப்பூ இருக்கிறது அதைப் பார்த்தாலே, யாரோ ஒருத்தருக்குக் குமட்டிக் கொண்டு வரலாம். பிரச்சினை ரோஜாவுடையதா? அவருடையதா?

உங்கள் கோபத்துக்கு அடிப்படைக் காரணம் மற்றவரல்ல, நீங்கள்தான் என்பதை உணர்ந்து விட்டீர்களானால், அந்தக் கோபம் எப்பேற்பட்ட முட்டாள்த்தனம் என்று புரிந்துவிடும்.

இப்படி நான் சொல்வதால், 'கோபிக்காமல் விட்டால், தவறு செய்பவர்கள் எப்படித் திருந்துவார்கள்?' என்றொரு கேள்வி வரலாம்.

இப்படித்தான் சங்கரன் பிள்ளை ஒருமுறை சந்தைக்குப் போயிருந்தார். ஒரு குறிப்பிட்ட கழுதை அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

"ஐயா, தயவுசெய்து இதை அடித்து, உதைத்து வேலை வாங்காதீர்கள். அன்பாகச் சொன்னாலே இது புரிந்து கொள்ளும்!"

ஆஹா.. அன்புக்குப் பணியும் கழுதையா? சங்கரன் பிள்ளைக்கு வியப்புத் தாங்கவில்லை அதிக விலை கொடுத்து, அதை வாங்கிவந்தார்.

மறுநாள்... சங்கரன் பிள்ளை கழுதையிடம் போய் அதை வருடிக் கொடுத்து, "வா கண்ணே... வேலைக்குப் போகலாம்" என்று அன்பான வார்த்தைகள் சொன்னார். கழுதை அசையவில்லை.

சங்கரன் பிள்ளை கழுதையைக் கெஞ்சினார். கெஞ்சினார். எதற்கும் கழுதை மசியவே இல்லை விற்றவனை அழைத்து வந்தார். அவன் ஒரு பிரம்பு எடுத்து 'சுளீர்' என்று கழுதையை அடித்தான் உடனே அது எழுந்து வேலைக்குத் தயாரானது.

சங்கரன் பிள்ளைக்குக் கோபம் வந்தது. "முரட்டுக்கழுதையைக்கூட இப்படியொரு வேகத்துடன் நான் அடித்ததில்லை. அப்படியிருக்க, அன்பாகச் சொன்னாலே அது கேட்டு அதன்படி நடக்கும் என்று சொல்லி என்னை ஏமாற்றி விட்டாயே?" என்று கேட்டார்.

"ஐயா, இப்போதும் சொல்கிறேன். அன்பான வார்த்தைகளைச் சொன்னாலே போதும். ஆனல், கழுதையின் கவனத்தை முதலில் நம்பக்கம் திருப்புவதற்கு, ஒன்றிரண்டு சவுக்கடிகள் தேவைப்படும்." என்றான் கழுதை வியாபாரி.

மற்றவரை நெறிப்படுத்த, இப்படி வேகமாகத் தட்டவேண்டி வரலாம். ஆனால், அதற்குக் கோபம் அவசியம் இல்லையே? உங்களுக்குக் கீழே வேலை செய்பவர்கள் அலுவலக விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் நீங்கள் சும்மாயிருக்க முடியாது. நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

ஆரம்பத்திலிருந்தே நீங்கள் அவரிடம் அன்பை மட்டுமே செலுத்தி வந்திருந்தால், உங்கள் மீது அவருக்கு முழு நம்பிக்கை வளர்ந்திருக்கும்.

அத்தியாவசியமான சூழ்நிலையால்தான், நீங்கள் வேதனையுடன் அப்படி ஒரு முடிவை எடுக்க நேர்ந்தது என்பதை அவர் உணர்வார். உங்கள் மீது இருக்கும் மரியாதை குறையாது. நட்பு மாறாது.



## ஆன்மீகம் 09

ஆனால், உங்கள் அதிகாரத்தை நிலைநாட்டும் வக்கிரமான சந்தோஷத்துக்காக நடவடிக்கை எடுத்தீர்களானால், அவர் உங்கள் மீது காழ்ப்பை வளர்ப்பார். தன் கை ஓங்குவதற்காகக் காத்திருப்பார்.

உலகில், அதிகாரத்தால் ஆள நினைக்கும் இடங்களில் பல புரட்சிகள் இப்படித்தான் வெடிக்கின்றன.

நீங்களே சொல்லுங்கள்... உங்களை ஆள நினைப்பவர்களை உங்களுக்குப் பிடிக்குமா? தோளில் கைபோட்டு அணைத்துக்கொள்ளும் நண்பர்களைப் பிடிக்குமா?

ஒவ்வாரு இடத்திலும் ஒவ்வொரு விதமாகச் செயற்பட வேண்டியிருக்கலாம். ஆனால், உங்கள் அடிப்படைத் தன்மையான அன்பை, அது அசைத்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அப்போதுதான் யாருக்கும் வலியில்லாமல் உங்கள் இலக்கை நீங்கள் அடைய முடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறுவர் இலக்கியம்

03

## சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு நோக்கு

நரியும் திராட்சைப்பழமும், ஆமையும் முயலும்; பொன்முட்டை வாத்து, காகமும் பாம்பும், சிங்கமும் முயலும் முதலானவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

'பொதுப்பாமாலை' என்னும் தொகுப்பில் முப்பத்து மூன்று கவிதைகள் உள்ளன. சிறுவர்களுக்கு அறப்போதனை செய்வதாக இதிலுள்ள பாடல்கள் அமைந்துள்ளமை முக்கியமானதாகும். சில தலைப்புக்கள் வருமாறு: கல்விச் செல்வம், அறிவழகே அழகு, குடி கெடுக்கும் குடி, தமிழ்மொழி, தேசப்பற்று, புகழ் யாக்கை, சிக்கனம் முதலானவை குறிப்பிடத்தக்கவை. ஈ.வே.ரா, சுவாமி விபுலானந்தர், தனிநாயகம் அடிகள் முதலான பெரியோர் பற்றிய பாடல்களும் இத்தொகுப்பிலுள்ளன. சில பாடல்கள் நீண்டவையாக இருப்பினும் எளிமையும் இனிய சந்தமும் உடையனவாக இவரது கவிதைகள் அமைந்துள்ளன. 'புகழ் யாக்கை' என்னும் பாடலிலுள்ள ஒரு பகுதி வருமாறு:

*'வாழ்க்கையில் முன்னேறிச் சென்றிடுவோம் - புகழ்*
*யாக்கை நிலைத்திட நின்றிடு*
*வோம்*
*ஈன்ற பொழுதினும் பெரிதுவக்க*
*- எங்கள்*
*ஈழமாதாவுமே பெயர் சிறக்க*
*சான்றோர் பெயரைப் பெறாவிடி*
*னும் - கருத்*
*தாய்மொழி சேவையைச் செய்திடு*
*வோம்'*

இப்பிரதேசத்தின் இத்துறை சார்ந்து எழுதியோருள் திமிலை மகாலிங்கமும் (சி.தங்கவேல்) சிறப்பிடம் பெறுகிறார். 'புள்ளிப் புள்ளிமானே' என்னும் இவரது தொகுப்பு (1991) கவனத்திற்குரியது. இத்தொகுப்பிலுள்ள 'புள்ளிப் புள்ளிமானே', 'புள்ளிப் புள்ளிக் கோழி', ஆகிய இரண்டு கவிதைகளும் தினகரனில் முறையே 1962இலும், 1958இலும் வெளிவந்தவை. புள்ளிப் புள்ளிமானே என்னும் பாடல் சிறுவர்களிடையே மிகவும் பிரபல்யம்பெற்ற பாடலாகும்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சிறுவர் இலக்கிய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இன்றுவரை பயன்படுத்தப்படும் இப்பாடல், ஆடிப்பாடுவதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியதாகும். அப்பாடலின் சில பகுதிகள் வருமாறு:

*'புள்ளிப் புள்ளிமானே*
*துள்ளித் துள்ளி ஓடி வா*
*அள்ளி இந்தப் புள்ளியை*
*யார் உனக்குத் தந்தது?*
*கண் உனக்கு கூர்மை*
*காது ரெண்டும் கேண்மை*
*பெண் இனத்தின் சாயல்*
*தெரியுதுந்தன் வடிவில்'*

இத்தொகுப்பில் அம்மா, அப்பா, குரு, தெய்வம், பாடசாலை, எமது நாடு, காற்று, நீர், கவச வாகனம், படை வருகிறது, ஆட்டுக்குட்டி, வைத்தியசாலை முதலான பாடல்களும் உள்ளன.

படை வருகிறது, கவச வாகனம் ஆகிய நூல் எழுதப்பட்ட காலத்தில் கவனயீர்ப்புப் பெற்ற விடயங்கள் தொடர்பானவை. கவச வாகனம் எனும் பாடலிலிருந்து ஒரு பகுதி வருமாறு:

*'கவச வாகனம் வருகிறது*
*கவலையீனமாய்த் திரியாதே*
*அவசரமாகப் போகிறது*
*அபாயம் ஏதோ நடக்கிறது*
*ஆமை போல இதன் தோற்றம்*
*அதற்கு நடுவே போர்வீரன்*
*தேவை வந்தால் படபடென்று*
*திசைகள் நான்கும் வெடிபாயும்'*

அறிவியல் விடயங்களையும் எழுதப்பட்ட காலத்தில் முக்கியம் பெற்ற விடயங்களையும் அடக்கியுள்ள வகையிலும் எளிமையையும் இனிய சந்தங்களையும் கொண்டுள்ள வகையிலும் இத்தொகுதி முக்கியத்துவம் பெற்றுள்ளது.

திமிலை மகாலிங்கத்தினால் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட நூல் 'சிறுவருக்கு விபுலானந்தர்' (1992) என்பதாகும். பல்வேறு தலைப்புகளில் சுவாமி விபுலானந்தரது வரலாற்றைக் கூறுகிறார். சில விடயங்கள் பாடல்களாக விளக்கப்படுகின்றன.

உ+ம் :

<u>பூமித்தாயின் இனிய மகன்</u>

*'காரைதீவில் பிறந்தவராம்*
*கல்விச் சேவை புரிந்தவராம்*
*பாரில் புகழாய் வாழ்ந்தவராம்*
*பண்பில் மிகவும் உயர்ந்தவராம்'*

இந்நூல் சாகித்திய விருது பெற்றது. திமிலை மகாலிங்கம், தான் உட்பட இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆரையூர் திமிலைத்துமிலன், திமிலைக்கண்ணன், செ.குணரத்தினம், நாகூர் ஏ.பாவா ஆகிய கவிஞர்களின் பாடல்களடங்கிய கனியமுது (1965) என்னும் சிறுவர் பாடல் தொகுப்பு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பில் 41 கவிதைகள் உள்ளன.

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

(தொடரும்)

# தூத்துக்குடி - கொழும்பு இடையே தோணி மூலம் பொருட்கள் அனுப்பும் பணி

## 13 ஆண்டுகளுக்கு பின் ஆரம்பம்

தூத்துக்குடி -கொழும்புக்கிடையே தோணி மூலம் பொருட்கள் அனுப்பும் பணி 13 ஆண்டுகளுக்குப் பின் எதிர்வரும் 9 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகின்றது.

தோணி எனப்படும் பாய்மரக்கப்பல் மூலம் தூத்துக்குடி–கொழும்பு இடையே சரக்கு வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாளடைவில் சரக்கு பெட்டகம் மூலம் இலங்கைக்கு பொருட்கள் அனுப்பப்பட்டதால் தோணி மூலம் ஏற்றுமதி செய்வது கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தோணி உரிமையாளர்கள் கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்று தூத்துக்குடி- கொழும்பு இடையே தோணி மூலம் பொருட்கள் அனுப்பும் பணி எதிர்வரும் 9 ஆம் திகதி மீண்டும் தொடங்குவது என முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தோணி உரிமையாளர்கள் சங்கத்தின் பொருளாளர் மெக்கன்னா தெரிவிக்கையில்,

கடந்த 1998 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒரு சில காரணங்களுக்காக இந்த தொழில் பாதிப்புக்கு உள்ளாகியது.

தற்போது அந்த பாதிப்புக்கள் நிவர்த்தி செய்யப்படுவதையடுத்து அனைவரும் இணைந்து எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் தூத்துக்குடி- கொழும்பு இடையே தோணி மூலம் பொருட்கள் அனுப்பும் பணி தொடங்குவது என முடிவு செய்யப்பட்டது என்றார். (ஸ்ரீ-2)

## சுதந்திரதின விழாவில் பிரதமர் பங்கேற்கவில்லை

(கொழும்பு)

63ஆவது தேசிய சுதந்திர தின விழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கதிர்காமத்தில் நேற்று நடைபெற்றது. இவ்விழாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,சபாநாயகர் சமல் ராஜபக்ஷ,பிரதம நீதியரசர் ஜே.ஏ.என். சில்வா ,அமைச்சர்கள்,பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ,பொலிஸ்மா அதிபர், முப்படைத்தளபதிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் பங்கு பற்றினர்.பிரதமர் டி.எம்.ஜெயரட்ன இவ்விழாவில் பங்கேற்கவில்லை. உடல் நலக் குறைவே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

கடந்தவருடம் ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையின் பிரதமராக டி.எம்.ஜெயரட்ன பதவி ஏற்ற பின்னர் நடைபெறும் முதலாவது சுதந்திர தினவிழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# இலங்கைக் கடற்படையை கண்டித்து பா.ம.க.ஆர்ப்பாட்டம்

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து மேட்டுப்பாளையத்தில் பா.ம.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் இலங்கைக் கடற்படை தாக்குதலுக்குள்ளாகி ஜெயக்குமார் , பாண்டியன் என இரண்டு தமிழக மீனவர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இலங்கைக் கடற்படையினரின் அட்டூழியத்தைக் கண்டித்து கோவை மாவட்ட பா.ம.க. சார்பில் மேட்டுப்பாளையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக மீனவர்கள் பிரச்சினையை தீர்க்க இந்தப்பிரச்சினையை உலக அளவில் எடுத்துச் சென்று தீர்வு காண வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (ஸ்ரீ-2)

# இந்திய பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பம் கோரல்

இந்திய வெளிவிவாகர அமைச்சினால் 2011 - 2012 கல்வி ஆண்டுக்காக சுயநிதியிடல் திட்டத்தின் கீழ் பொறியியல் இளமாணி மருத்துவம் மற்றும் மருந்தக இளமாணி கற்கை நெறிகளுக்க்ரக ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கு நியமனம் பெறுவதற்கு இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவால் வேலை நாட்களில் பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது தமது க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர சான்றிதழ்களையும் பிறப்புச் சான்றிதழையும் எடுத்து வருமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைகளை இலங்கையில் தோற்றிய விண்ணப்பதாரிகள் பத்தரமுல்லயிலுள்ள கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்களையும் லண்டன் பரீட்சைகளுக்கு தோற்றியவர்களாயின் லண்டன் சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்தியாவில் க.பொ.த. உயர் தரத்தில் (10+2) கல்வி கற்றுக் கொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும். மார்ச் 30ஆம் திகதி வரை மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள் 12 மணித்தியாலங்களின் பின் மீட்பு

கடற்கொந்தளிப்புக் காரணமாக படகு கவிழ்ந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் 12 மணித்தியாலங்கள் பின் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு செல்வபுரப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை வேளை 5.30 மணியளவில் மீன்பிடிப்பதற்காக ஜெகன், அந்தோனிப்பிள்ளை ஆகிய இருமீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

இவர்கள் ஆழ்கடல் பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை கடல் கொந்தளிப்பு காரணமாக அவர்களின் படகு திடீரெனக் கவிழ்ந்தது.


ஆழ்கடலில் வீழ்ந்த இவர்கள் உயிருக்குப் போராடி மாலை 5 மணிவரை நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வேளையில், கரையிலிருந்து 1 1/2 கிலோ மீற்றருக்கு அண்மித்த பகுதியில் இவர்கள் வந்து கொண்டிருப்பதை கரையிலிருந்து அவதானித்த முருகானந்தராசா, விநாயகராசா ஆகிய இரு வரும் தமது உயிரைத் துச்சமென மதித்து அர்ப்பணிப்புடன் கடலில் குதித்தனர்.

மேற்படி இருவரின் செயற்பாட்டால் மீனவர்கள் இருவரும் கரைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்களின் செயலைப் பாராட்டிய முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பாராட்டு விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. (ஸ்ரீ-2)

# 63ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள்

யாழ்.மாவட்டச் செலயலகத்தில்....



யாழ்.மாநகரசபையில்....



வட மாகாண கல்வி அமைச்சில்.....



யாழ். வலயக்கல்வி பணிமனையில்....



படங்கள்:-என்.குமார்

## சர்வதேச நெருக்கடியால்

# வெளிநாட்டு இராஜதந்திரிகளை அழைத்து விளக்கமளித்த அரசு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என சர்வதேச நாடுகளை நம்ப வைப்பதற்கான நடவடிக்கைகளை ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இவ் விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் நோக்குடன் கடந்த இரு தினங்களாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களில் கடமை புரியும் இராஜதந்திரிகளுக்கான கருத்தரங்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் நடத்தப்பட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் குறித்து இக் குழுவுக்குத் தலைமை தாங்கும் சட்டமா அதிபர் மொகான் பீரிஸால் இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது.

தடுப்புக் காவலில் உள்ள போராளிகள் பற்றிய விவகாரம், காணிப் பிரச்சினைகள், சட்டம், ஒழுங்கு, நிர்வாகம், மொழிப் பிரச்சினைகள் மற்றும் சமூக பொருளாதார விவகாரங்கள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இக் குழு நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா?பக்கச் சார்பின்றி சுயாதீனமாக இந்த ஆணைக் குழு அறிக்கையைத் தயார் செய்யுமா? போன்ற சந்தேகங்கள் மனிதவுரிமை அமைப்புக்களிடமும் சர்வதேச நாடுகளிடம் காணப்படுவதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது வெறும் கண்துடைப்பு நடவடிக்கை என மனிதவுரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

அத்துடன் வன்னியில் இடம்பெற்ற போரின் போது இலங்கை படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என பிரித்தானியா உட்பட மேற்கத்தைய நாடுகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இம் மாத இறுதிக்குள் கையளிக்கப்படவுள்ளதுடன் ஜெனிவாவில் அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையகத்தின் கூட்டமும் இடம்பெறவுள்ளது. இந்நிலை மனிதவுரிமை அமைப்புக்களையும் சர்வதேச நாடுகளையும் திருப்திப்படுத்தும் நோக்குடனேயே வெளிவிகார அமைச்சு இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ-2)

## மலைநாட்டில் பெய்துவரும் கனமழையால் 27 இடங்களில் நிலச்சரிவு அபாயம்

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் தற்போது பெய்து வரும் கனமழையால் கண்டி, மாத்தளை, நுவரெலியா , பதுளை மாவட்டங்களில் 27 இடங்களில் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து காணப்படுவதாக தேசிய கட்டட மற்றும் ஆய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, பண்டாரவளை, பண்டார வளை, ஹாலி-எல, பேரகல, ஹெல்ல, பதுளை ,ஊவா-பரணகம ஆகிய பிரதேசங்களிலும் கண்டி மாவட்டத்தின் கங்கயட்ட கோரள, இஹல கோரள, ஹாரிஸ்பத்து, துப்பனை, பாஹத்த ஹேவாஹெட்ட, உட தும்பர, பாஹத்த தும்பர, உடபலாத்த, யடிநுவர ஆகிய பிரதேசங்களிலும் நுவரெலியா மாவட்டத்தின் பலப்பனை, ஹங்குராங் கெத்த, கொத்மலை, அம்பகமுவ, நுவரெ லியா ஆகிய பிரதேசங்களிலும் மாத்தளை மாவட்டத்தின் ரத்தோட்டை, யடவத்தை , பல்லேபொல, உக்குவளை ஆகிய பிரதேசங் களிலும் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து காண ப்படுகிறது என பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்கள் இது குறித்து அவதானத்துடன் இருக்குமாறு கட்டட மற்றும் ஆய்வு பணியகத்தின் தலைவர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளை -பண்டாரவளை வீதியின் கஹாகொல்ல பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்படக் கூடிய நிலைமை காணப்படுகிறது. நுவரெலியா - பதுளை வீதியிலும் நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் கவனமாக பயணம் செய்யுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)




★ *1597* - ஜப்பானின் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பலர் ஜப்பானின் புதிய அரசால் ஜப்பானிய சமுகத்திற்குக் கெடுதலாக இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

★ *1782* - ஸ்பானியர் பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்து மினோர்க்கா தீவைக் கைப்பற்றினர்.

★ *1782* - ஒகைய்யோவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 90 அமெரிக்கப் பழங்குடிகள் வெள்ளை இனத்தவரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ *1885* - பெல்ஜிய மன்னன் இரண்டாம் லியோபோல்ட் கொங்கோவைத் தனது தனிப்பட்ட பிரதேசமாக ஆக்கினான்.

★ *1900* - பனாமா கால்வாய் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ *1922* - ரீடர்ஸ் டைஜஸ்ட் மாதிகை முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

★ *1958* - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் சவான்னா கரைகளில் அமெரிக்க வான் படையினரால் ஐதரசன் குண்டு ஒன்று காணாமல் போனது. இதுவரையில் இது கண்டுபிடிக்கப்படவில்லை.

★ *1960* - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல் கலைக் கழகம் மொஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

★ *1914* - அலன் ஹொட்ஜ்கீன், நோபல் பரிசு பெற்றவர் (இ.1998)

★ *1915* - ரொபர்ட் ஹொஃப்ஸ்டாட்டர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1990)


★ *1976* - அபிஷேக் பச்சன், இந்தி நடிகர்

### இறப்புகள்

★ *1898* - எம்.சி.சித்திலெப்பை, ஈழத்துத் தமிழ் அறிஞர் (பி.1838)

★ *1999* - வசீலி லியோன்டியெஃப், நோபல் பரிசு பெற்ற ரஷ்யப் பொருளியலாளர் (பி.1906)

★ *2008* - மகேஷ்யோகி, இந்திய ஆன்மீகக் குரு (பி.1917)



**1971ஆம் ஆண்டு அப்பல்லோ -14 விண்கலம் அலன் ஷெப்பர்ட், எட்கார் மிட்ச்செல் ஆகியோருடன் சந்திரனில் தரை இறங்கியது.**

## இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் நிதியுதவி

இலங்கைக்கு 216.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியம் கடந்த புதன்கிழமை அறிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் நாட்டை கட்டியெழுப்புவதற்காக வழங்கப்படவுள்ள 2.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் கடந்த 18 மாதங்களில் வழங்கப்படும் புதிய நிதி விநியோகம் இதுவாகும்.

யுத்தத்தின் பின் இதுவரை மொத்தமாக 1.5 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன இந்நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளன. பாரிய பொருளாதார அபிவிருத்திகள் சாதகமான முறையில் தொடர்கின்றன என சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் நவோயுகி ஷினாஹாரா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## உயர்கல்வி வாய்ப்புகளும் தொழில் வழிகாட்டலும் பற்றிய கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சட்டவள நிலையம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் உயர்கல்வி வாய்ப்புகளும் தொழில் வழிகாட்டலும் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ரி.முருகதாசன் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் க.பொ.த. உயர்தர மாணவர்களும் பல்கலைக்கழக புகுமுக வாய்ப்பினைப் பெறாதவர்களும் பங்குபற்ற முடியும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி. மாவட்ட ஆளுநர் லயன் எஸ். ஜெயவக்சலன் (MJF), கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ். பல்கலைக்கழக தொலைக்கல்வி நிலைய (வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு), இணைப்பாளர் கே. சிவராஜா, இலங்கை திறந்த பல்கலைக்கழக இணைப்பாளரும் வவுனியா வளாக பொருளியல் முகாமைத்துவப்பிரிவு தலைவருமான கலாநிதி ஏ. புஷ்பநாதன், மதுரை காமராஜ் பல்கலைக்கழக தொலைக்கல்வி இணைப்பாளர் ஓ.கே. குணநாதன், கிழக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) உதவிப்பணிப்பாளர் எந்திரி ஏ.வி.சி. ஜெயக்குமார், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) மாவட்ட முகாமைளாளர் (வடக்கு ) ஜி.ரி. ரட்ணகுமார், யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவன உதவிப்பதிவாளர் சி.சிவநாதன், கொழும்பு சட்ட விரிவுரையாளர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

– சிலப்பதிகாரம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இயற்கையின் சீற்றம் ஏற்படக் காரணம் யாதோ?

இலங்கையை இயற்கை ஒருகை பார்ப்பதென முடிவெடுத்து விட்டது போலும். நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக, மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அதிலும் கிழக்கு மாகாணம் மழை வெள்ளத்தால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிந்து இடம்பெயர்வு வாழ்வுக்கு முடிவு கட்டலாம் என்றால், இயற்கை அதற்கு அனுமதி தருவதாக இல்லை.

எதுவாயினும் இயற்கை எங்களைச் சீண்டத் தயாராகிவிட்டது. அதிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்யலாம். இதுவே இப்போது மக்களிடம் எழுந்துள்ள கேள்வி.

முன்பெல்லாம் மழை, வெள்ளப்பெருக்கு, பூகம்பம் இப்படியாக இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால், மன்னனின் தவறான ஆட்சியே அதற்குக் காரணம்என்று கூறலாம். அந்தக் குற்றச்சாட்டை ஏற்று மன்னன் காடேகுவதும் வழமை.

இதைவிட குற்றம் இல்லாதவர்களை சிறையில் அடைத்து வைக்கும்போதும் இயற்கை சீற்றம் கொள்வதாகக் கூறப்படும்.

இந்த இரண்டு விடயங்களைத் தவிர நாட்டில் அநீதி தாண்டவமாடும்போது, ஊழல்களும், மோசடிகளும் மலியும்போது, அப்பாவி மக்கள் ஏமாற்றப்படும்போது, இயற்கை கோபம் கொண்டு இந்தப் பூமியில் வாழ்வதற்கு ஊறு செய்யும் என்பது காலாகாலமாக நம்பப்படுவதாகும்.

இப்போது இலங்கையில் அடிக்கடி இயற்கை கொதிக்கிறது. எனவே இதற்கு முடிவு கட்ட வேண்டும். இதற்கு முடிவு கட்டுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. அதில் ஒன்று சிறைகளில் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞர் யுவதிகளை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்வதாகும்.

எதுவித விளக்கம் விசாரணை எதுவுமின்றி சிறையில் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞர் யுவதிகள் கண்ணீர் வடிக்கின்றனர். அவர்களை நினைந்து அவர்களின் பெற்றோர் கண்ணீர் வடிக்கின்றனர். இவர்களின் கண்ணீருக்கு இன்னமும் முடிவு கட்டப்படாத நிலையில், இயற்கை சீற்றம் கொண்டுள்ளதாக அரசு கருதிஅவர்களை விடுதலை செய்யவேண்டும்.

இது ஒரு வழி. அடுத்தவழி பொதுமக்களினுடையதாகும். பொதுமக்கள் இயற்கை மீது சத்தியம் செய்யவேண்டும். அந்தச் சத்தியம் எனது வாக்கு நீதியை, நேர்மை நிலைநாட்டுபவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் எனது வாக்கு அதர்மத்திற்கு அளிக்கப்படமாட்டாது. இப்படி பொதுமக்கள் சத்தியம் செய்ய வேண்டும்.

இந்த இரண்டும் நடந்தால் மட்டுமே இலங்கையில் இயற்கையின் சீற்றம் தணியும்.

# அரசுக்கு ஆதரவாக கே.பி. பிரசாரம்! லங்கா கார்டியன் செய்தி வெளியீடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் இலங்கை அரசாங்கத்தின் தேர்தல் பரப்புரைகளில் தற்போது பங்கேற்று வருவதாக லங்கா கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனவரி 30ஆம் திகதி கிளிநொச்சிக்கும், 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் கே.பி. பயணம் மேற்கொண்டிருந்தார். தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ நிச்சயம் தீர்வினை வழங்குவார் என அங்கு தமிழ் மக்கள் மத்தியில் அவர் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கே.பியின் பயணத்தில் இணைந்திருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடபகுதிக்கான கே.பியின் பயணம் படைத்தரப்பின் பாதுகாப்புடன் அமைந்திருந்தது. 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இவர், கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டதாக அரசாங்கத் தரப்பால் கூறப்பட்டது. கே.பியின் தடுப்புக் காவல் தொடர்பாக ஊடகங்கள் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பியபோதும் அரசாங்கம்அதற்குபதிலளிக்காதுவந்துள்ளது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒருவர் குறைந்த பட்சம் 03 மாதத்திற்கு ஒருமுறை நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லப்படவேண்டும் என்பதே தற்போதைய சட்ட நடைமுறையாகும். கடந்த 15 மாதங்களுக்கு மேல் கே.பி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்ற போதும் இதுவரை ஒருமுறைகூட அவரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தவில்லை.

மேஜர் ஜெனரல் கபில ஹென்ர விதாரணவினால் கே.பி. கையாளப்படுவதாகவும் கே.பி. அரசியல் கட்சி தொடங்குவதற்குரிய திட்டங்களை அவர் வகுத்துக் கொடுப்பதாகவும் லங்கா கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது. (ச–5)

## தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ள

# பூந்தமல்லி, செங்கல்பட்டு முகாம்களை பூட்டக் கோரிப் போராட்டம்!

(சென்னை)

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டிலுள்ள அகதி முகாம்களை இழுத்துப் பூட்டும் போராட்டம் ஒன்றை இம் மாத இறுதியில் நடத்தப் போவதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். இது குறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டில் அகதி முகாங்கள் என்ற பெயரில் தமிழக அரசு சட்டவிரோதமாக சித்திரவதைக் கூடங்களை நடத்துகின்றது. மேற்கண்ட இரண்டு முகாம்களும் இலங்கை மீள் குடியேற்ற முகாமினை விட மோசமாகவுள்ளது. ஆடு, மாடுகளை அடைக்கும் கொட்டகையை விட கேவலமாக அடிப்படை வசதிகள் எதுவுமற்ற இடத்தில் அங்கு தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த அவலநிலை தொடராமல் இருக்க நாம் தமிழர் கட்சி சார்பில் பெப்ரவரி மாத இறுதியில் பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டில் உள்ள அகதி முகாம்களை இழுத்துப் பூட்டும் போராட்டம் எனது தலைமையில் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் என சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# இந்தியா வழங்கிய போர்க் கப்பலை மீள ஒப்படைத்தது இலங்கை கடற்படை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக இலங்கை கடற்படையினருக்கு இந்தியா வழங்கிய போர்க்கப்பல் மீண்டும் இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் கடற்புலிகளின் விநியோகங்களைத் தடுப்பதற்காக இலங்கை கடற்படையினருக்கு இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றை வழங்கியது.

2008ஆம் ஆண்டு விக்ரகா என்னும் பெயரைக் கொண்ட இப் போர்க் கப்பல் கடற்படையினரிடம் இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையால் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருந்து கடல் முற்றுகை மற்றும் ஆழ்கடல் தாக்குதல் நடவடிக்கைகளில் இப் போர்க்கப்பல் ஈடுபடுத்தப்பட்டது.

கடந்த 29 மாதங்களாக சயுரால என்ற பெயருடன் இணைக்கப்பட்டிருந்த இப் போர்க் கப்பலே தற்போது இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டதை அடுத்தே இப் போர்க் கப்பலை இந்தியா மீளப் பெற்றுள்ளது. இப் போர்க் கப்பல் கொச்சி கடற்படைத் தளத்தில் வைத்து கடந்த மாதம் 23ஆம் திகதி அதிகாரபூர்வமாக இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச–5)

# வவுனியா, கிளி.மாவட்ட சுதந்திர தின விழாக்களில் சிங்களத்தில் தேசிய கீதம்

இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தேசிய கீதம் சிங்கள மொழியில் இசைக்கப்பட்டதாக மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் வளாகங்களில் மழைக்கு மத்தியில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று கொண்டாடப்பட்டதாகவும் இந்நிகழ்வுகளில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் கலந்து கொண்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று காலை 8.50 மணியளவில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தின நிகழ்வு கொண்டாடப்பட்டதாக யாழ். அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தேசிய கீதத்துக்கான இசை மாத்திரம் போடப்பட்ட நிலையில் சுதந்திர தின நிகழ்வு கொண்டாடப்பட்டதாகவும் இதில் வடமாகாண சபை செயலாளர்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை முல்லைத்தீவிலும் சுதந்திர தின நிகழ்வு மழை காரணமாக அமைதியான முறையில் நடைபெற்றதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் தேசிய கொடி ஏற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் மன்னாரிலும் நேற்று காலை மாவட்ட செயலக வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு சுதந்திர தின நிகழ்வு கொண்டாடப்பட்டதாக மன்னார் அரசாங்க அதிபர் என். வேதநாயகம் தெரிவித்தார். அத்துடன் மாவட்ட செயலக வளாகத்தில் 15 பயன் தரு மரங்கள் நடப்பட்டதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ–2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்




வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி, இன்றும் நிலைத்து நிற்கும் மதங்கள் மூன்று. அவை இந்து மதம், சொராஸ்டிரிய மதம், யூத மதம் ஆகும். அவை அனைத்தும் பல கடுமையான அதிர்ச்சிகளுக்கு உட்பட்டும், இன்றும் நிலைத்திருப்பதன் வாயிலாக தங்கள் உள் வலிமையை நிரூபிக்கின்றன.

யூத மதம் கிறிஸ்தவ மதத்தைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளத் தவறியது மட்டுமன்றி, அனைத்தையும் வெற்றி கொண்டதும் தன்னிலிருந்து தோன்றியதுமான கிறிஸ்தவ மதத்தால், பிறந்த இடத்திலிருந்தே விரட்டி அடிக்கப்பட்டுவிட்டது. இன்று தங்கள் பெருமைக்குரிய மதத்தை நினைவுபடுத்த ஒரு சில பார்சிகள் மட்டுமே வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய மண்ணில் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனையோ கிளைமதங்கள் உண்டாயின. வேத நெறியின் அடித்தளத்தையே அவை உலுக்கிவிடும் போலத் தோன்றியது. ஆனால், பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டால், எப்படிக் கடலானது சிறிது நேரம் பின்னோக்கிச் சென்று, பின்னர் ஆயிரம் மடங்கு சீற்றத்துடன் பெருகி வந்து அனைத்தையும் வளைத்துக் கொள்கிறதோ, அதுபோல, எல்லா கிளை மதங்களும் ஆரம்ப ஆரவாரம் ஓய்ந்ததும் மிகப் பெரியதான தாய்மதத்தால் கவர்ந்து இழுக்கப்பட்டு, அதனுள் இரண்டறக் கலந்து விட்டன.

# ஏமனிலும் ஜனாதிபதிக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு வலுக்கிறது



ஏமன் நாட்டில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீதிகளில் இறங்கி பேரணி நடத்தினார்கள். ஜனாதிபதி அலி அப்துல்லா சலே எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு பதவி விலகுவதாக கூறியதை அவர்கள் ஏற்கவில்லை. உடனடியாக பதவிவிலக வேண்டும் என்றும் கோரினார்கள்.

அரேபியா வளைகுடாவில் உள்ள நாடுகளில் ஒன்றான ஏமன் நாட்டில் ஜனாதிபதியாக இருப்பவர் அலி அப்துல்லா சலே. அவர் கடந்த 30 ஆண்டுகளாக இந்தப் பதவியை வகித்து வருகிறார். அவர் பதவி விலக வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

போராட்டக்காரர்களை சமாதானப்படுத்துவதற்காக ஜனாதிபதி அலி அப்துல்லா எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு என் பதவி காலம் முடிவடைகிறது. அதன்பின் நான் பதவி நீட்டிப்பு கோரமாட்டேன் என்றும் என் மகனும் என் வாரிசாக ஜனாதிபதி பதவிக்கு வரமாட்டார் என்றும் கூறினார். ஆனால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

நேற்று முன்தினம் அவரை பதவி விலகக் கோரி சனா நகரில் பேரணி இடம்பெற்றது. இதில் 20 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். அவர்கள் ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் போட்டனர். ஊழலையும் சர்வாதிகாரத்தையும் எதிர்ப்பதாக அவர்கள் குரல் எழுப்பினார்கள். நேற்று முன்தினம் போராட்டத்தை ஏற்பாடு செய்த வீல் மன்சூர் ஜனாதிபதி சலேயின் அறிவிப்பு ஏமன் நாட்டு மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றும் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கு ஆதரவானவர்களும் சனா நகரத் தெருக்களில் கூடி விட்டனர். அவர்கள் ஜீப்புகளில் ஏறிக் கொண்டு ஒலிபெருக்கிகளில் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முறியடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஏமன் நாட்டில் அல்கொய்தா ஆதரவு தீவிரவாதிகள் பெரும் அளவில் இருக்கிறார்கள். அவர்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கா ஏமன் நாட்டுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஏமன் ஜனாதிபதிக்கு தொலைபேசி மூலம் அவருக்கு தன் ஆதரவைத் தெரிவித்தார்.

நீங்கள் நிலைமையை மிக நன்றாக சமாளித்து வருகிறீர்கள். உங்களுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக இருக்கிறேன் என்று அவர் தெரிவித்தார். ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் அல்தகிர் சதுக்கத்தில் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த இடத்தை அரசு ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினார்கள். இதனால் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் சனா பல்கலைக்கழகத்தில் நடந்தது. ஜனாதிபதி அலி அப்துல்லாவின் மக்கள் காங்கிரஸ் கட்சியினர் அந்த சதுக்கத்துக்குள் முகாம்களை அமைத்தனர். ஜனாதிபதியின் உருவப்படங்களை அந்த திடல் முழுவதும் அலங்கரித்தனர். நேற்று முன்தினம் அந்த திடலுக்கு வெளியே திரண்ட பொலிஸார் ஜனாதிபதியின் ஆதரவாளர்களை மட்டுமே திடலுக்குள் செல்ல அனுமதித்தனர் (ஸ்ரீ-2)

## பிரிட்டனில் தங்க போலித் திருமணம்

### இந்தியருக்கு சிறை

இங்கிலாந்தில் தங்கி இருப்பதற்காக அங்கு வசிக்கும் அந்த நாட்டு குடியுரிமை பெற்ற ஒரு பெண்ணை இந்தியர் ஒருவர் போலியாக திருமணம் செய்து கொண்டார்.

இதை இங்கிலாந்து எல்லை பாதுகாப்பு முகவர் கண்டுபிடித்து அவர் மீது நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 16 மாத சிறைத் தண் டனை விதித்ததுடன் அவர் போலியாக திருமணம் செய்து கொண்ட பெண்ணுக்கு 14 மாத சிறைத் தண்டனை விதித்தது. (ஸ்ரீ-2)




## நேபாளத்தின் புதிய பிரதமராக ஜலாநாத் கானல் தெரிவு

(காத்மண்டு)




நேபாளத்தின் புதிய பிரதமராக நேபாள ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் தலைவர் ஜலாநாத் கானல் (வயது 60) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் கடந்த 7 மாதகாலமாக அந்நாட்டில் பிரதமரை தேர்ந்தெடுப்பதில் நிலவி வந்த சிக்கல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

601 உறுப்பினர்களை உள்ளடக்கிய நேபாள நாடாளு மன்றத்தில் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கு நடைபெற்ற வாக்கெடுப்பில் மொத்தம் 557 வாக்குகள் பதிவாகின.

இதில் 368 வாக்குகளை ஜலாநாத் கானல் பெற்று வெற்றி பெற்றார். நேபாளத்தின் பிரதமராக இருந்த மாதவ்குமார் மாவோயிஸ்ட் டுகளின் நெருக்குதலால் கடந்த ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து . புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க கடந்த 7 மாத காலமாக பலசுற்றுத் தேர்தல் நடைபெற்றது. (ஸ்ரீ-2)



நேபாள நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) தலைவர்களில் ஒருவரான ஜகல்நாத் கனாலுக்கு (இடது), மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் புஷ்பா கமல் தகால் (வலது) வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## மீண்டும் வெள்ளத்தில் மிதக்கிறது அவுஸ்திரேலியா

### 30 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்

அவுஸ்திரேலியாவில் கடந்த மாதம் பலத்த மழையினால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்ததில் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வடகிழக்குப்பகுதியில் உள்ள குயின்ஸ்லாந்து மாநிலத்தில் பயங்கரப் புயல் தாக்கியது. யாசி என்று பெயரிடப்பட்ட இந்தப் புயல் தாக்கிய போது 290 கிலோ மீற்றர் வேகத்தில் பயங்கர சூறைக்காற்று வீசியது. பலத்த மழையும் கொட்டியது. இதில் பல வீடுகள் இடிந்து வீழ்ந்தன. வீட்டின் கூரைகள் காற்றில் பறந்தன. மரங்களும் மின் கம்பங்களும் சரிந்து விழுந்தன. பலத்த மழையினால் கையூன்ஸ் ,குள்ளி கார்ட்டுவன் ஆகிய நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. குள்ளி நகரில் 90 சதவீத வீடுகள் சேதமடைந்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

30ஆயிரம் பேர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புயல் மற்றும் வெள்ளத்தில் சிக்கி பலர் பலியாகியுள்ளனர். ஆனால் இறந்தவர்கள் பற்றி முழு விபரமும் தெரியவில்லை.

மின் கம்பங்கள் சாய்ந்து விழுந்து விட்டதால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது.(ஸ்ரீ-2)

## முபாரக்கை பதவி விலகுமாறு ஐந்து நாடுகள் கோரிக்கை


(பாரிஸ்)

எகிப்து நாட்டில் உடனடியாக ஆட்சி மாற்றம் தேவை என ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இது குறித்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள பிரிட்டன், பிரான்ஸ் , ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஒன்றாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

எகிப்தில் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது கண்டனத்துக்குரியது. இந்நாட்டு மக்கள் அமைதியான முறையில் பாராளுமன்றை நடத்தும் சூழல் ஏற்பட வேண்டும். பாதுகாப்பு படையினரின் முழு ஒத்துழைப்பு அவர்களுக்குத் தேவை. எகிப்தில் தற்போது நிலைமை தலை கீழாகஉள்ளது. எனவே அங்கு நிலவும் பிரச்சினைக் குத் தீர்வு ஏற்படும்.

எகிப்தில் வன்முறையை தூண்டுவோரின் செயலும் கண்டனத்துக்குரியது என ஐரோப்பிய நாடுகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் உள்ள எகிப்திய தூதரகம் முன்பு ஜனாதிபதி முபாரக்கிற்கு எதிரான கோஷங்களை எழுப்பி மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதை படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் அணிக்கு சகிட் அப்ரிடி தலைவர்



(இஸ்லாமாபாத்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் தலைவரா்க சகிட் அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை அப் ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது. இதனால் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணிக்கு சகிட் அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார். அவரே பொருத்தமானவர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக்கையும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான அணித்தலைவராக நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆலோசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் அரங்கில் முதலாவது உலக சம்பியன் மேற்கிந்தியத் தீவுகள்


14 அணிகள் பங்கேற்கும் 10-வது உலகக்கிண்ணக் கிரிக்கெட் திருவிழா ஆரம்பமாக இன்னும் 14 நாட்களே உள்ளன.

இந்நிலையில் இதுவரை நடந்த 09 உலகக்கிண்ணத் தொடர்கள் பற்றிய அலசல்,

**முதலாவது உலகக்கிண்ண தொடர்-1975**

கிரிக்கெட் அரங்கில் சர்வதேச ஒருநாள் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டு 04 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை முதலாவது உலகக்கிண்ணத் தொடர் நடத்தப்பட்டது.

இத் தொடரை கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து நடத்தியது. புருடென்சியஸ் அஸ்சூரன்ஸ் கம்பனி அனுசரணை வழங்கியதால் முதலாவது உலகக் கிண்ணத் தொடர் புருடென்சியஸ்கிண்ணம்என்று அழைக்கப்பட்டது.



இதில்போட்டி 60 ஓவர்கள் கொண்டது. கிரிக்கெட்டின் பாரம்பரிய ஆடையான வெள்ளைநிற உடைகளை வீரர்கள் அணிந்திருந்தனர்.

மேலும் சிவப்பு நிறப் பந்தே பயன்படுத்தப்பட்டது. எல்லா ஆட்டங்களும் பகலிலேயே நடத்தப்பட்டன. 60 ஓவர்கள்போட்டிஎன்பதால்காலையில் சீக்கிரம் போட்டி ஆரம்பமாகிவிடும்.

இதில்மொத்தம் 08 அணிகள் பங்கேற்றன. அவை இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஏ பிரிவில் இங்கிலாந்து, இந்தியா, கிழக்கு ஆபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய அணிகளும் பி பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய அணிகளும் இடம்பெற்றன.

இதில் இலங்கை, கிழக்கு ஆபிரிக்கா தவிர மற்றைய ஆறு அணிகளும் டெஸ்ட் அந்தஸ்த்து பெற்றவையாகும். ஒவ்வொருஅணியும்தங்கள்பிரிவில் உள்ள மற்றைய அணிகளுடன்தலா ஒருமுறைமோத வேண்டும்.

இத் தொடரின் லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இதில் ஏ பிரிவில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளும் பி பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

அரையிறுதியில் அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தையும், மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூசிலாந்து அணியையும் தோற்கடித்தன.

இதனடிப்படையில் ஜூன் 21ஆம் திகதி லண்டனில் மேற்கிந்தியத் தீவுகள் -அவுஸ்திரேலிய அணிகளுக்கிடைலான இறுதிப் போட்டி நடைபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 60 ஓவர்களில் 08 விக்கெட்டுக்களையிழந்து 291 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் அணித்தலைவர் கிளைவ் லொய்ட் 85 பந்துகளில் (12 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் அடங்கலாக) 102 ஓட்டங்களை விளாசினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 58.4 ஓவர்களில் 274 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம்மேற்கிந்தியத் தீவுகள் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று எதிர்பார்த்தது போலவே முதலாவது உலக சம்பியனானது. அணித்தலைவர் கிளைவ் லொய்ட் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இத் தொடரில் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் 137 ஓட்டங்களை விளாசிய இங்கிலாந்து அணி வீரர் டென்னிஸ் சிமித், உலகக் கிண்ண வரலாற்றில் முதலாவது சதத்தைப் பெற்றவர் என்ற சிறப்பைப் பெற்றார்.

**சுனில் கவாஸ்கரின் ஆமை வேகம்**

இத் தொடரில் இங்கிலாந்து அணியுடனான முதலாவது லீக் போட்டியில் இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் ஆமை வேகத்தில் துடுப்பெடுத்தாடினார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில்விளையாடிஅனுபவம்அப்போது இந்திய வீரர்களுக்கு போதாது. காரணம் முதலாவது உலகக் கிண்ணத் தொடருக்கு முன் இந்திய அணி இரண்டு ஒருநாள் போட்டிகளில் மட்டுமே மோதியது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி டென்னிஸ் கமரின் சதத்தின் மூலம் 60 ஓவர்களில் 04 விக்கெட்டையிழந்து 334 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 60 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களையிழந்து 132 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 202 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் 60 ஓவர்கள் நிறைவடையும் வரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்து எத்தனை ஓட்டங்கள் எடுத்தார் தெரியுமா? வெறும் 36 ஓட்டங்கள். இதற்காக அவர் எதிர்கொண்ட பந்துகள் 174. இதில் ஒரு பவுண்டரியை மட்டுமே கவாஸ்கர் அடித்தார்.




# போட்டி அட்டவணை

| திகதி/நேரம் | மோதும் அணிகள் | மைதானம் |
|---|---|---|
| பெப்.19, பி.ப 2.30 | பங்களாதேஷ் – இந்தியா | மிர்பூர் |
| பெப்.20,காலை. 9.30 | கென்யா – நியூசிலாந்து | சென்னை |
| பெப்.20, பி.ப. 2.30 | இலங்கை – கனடா | அம்பாந்தோட்டை |
| பெப்.21, பி.ப. 2.30 | அவுஸ்திரேலியா – சிம்பாவே | அகமதாபாத் |
| பெப்.22, பி.ப. 2.30 | இங்கிலாந்து – நெதர்லாந்து | நாக்பூர் |
| பெப்.23, பி.ப. 2.30 | கென்யா – பாகிஸ்தான் | அம்பாந்தோட்டை |
| பெப்.24, பி.ப. 2.30 | தென்னாபிரிக்கா – மே.தீவுகள் | டில்லி |
| பெப்.25,காலை. 9.30 | அவுஸ்திரேலியா – நியூசிலாந்து | நாக்பூர் |
| பெப்.25, பி.ப. 2.30 | பங்களாதேஷ் – அயர்லாந்து | மிர்பூர் |
| பெப்.26, பி.ப. 2.30 | இலங்கை – பாகிஸ்தான் | கொழும்பு |
| பெப்.27, பி.ப. 2.30 | இந்தியா – இங்கிலாந்து | பெங்களூர் |
| பெப்.28,காலை. 9.30 | கனடா – சிம்பாவே | நாக்பூர் |
| பெப்.28, பி.ப. 2.30 | நெதர்லாந்து – மே.தீவுகள் | டில்லி |
| மார்ச் 01, பி.ப. 2.30 | இலங்கை – கென்யா | கொழும்பு |
| மார்ச் 02, பி.ப. 2.30 | அயர்லாந்து – இங்கிலாந்து | பெங்களூர் |
| மார்ச் 03,காலை. 9.30 | நெதர்லாந்து – தென்னாபிரிக்கா | மொகாலி |
| மார்ச் 03, பி.ப. 2.30 | கனடா – பாகிஸ்தான் | கொழும்பு |
| மார்ச் 04,காலை. 9.30 | சிம்பாவே – நியூசிலாந்து | அகமதாபாத் |
| மார்ச் 04, பி.ப. 2.30 | பங்களாதேஷ் – மே.தீவுகள் | மிர்பூர் |
| மார்ச் 05, பி.ப. 2.30 | இலங்கை – அவுஸ்திரேலியா | கொழும்பு |
| மார்ச் 04,காலை. 9.30 | தென்னாபிரிக்கா – இங்கிலாந்து | சென்னை |
| மார்ச் 06, பி.ப. 2.30 | இந்தியா – அயர்லாந்து | பெங்களூர் |
| மார்ச் 07, பி.ப. 2.30 | கனடா – கென்யா | டில்லி |
| மார்ச் 08, பி.ப. 2.30 | பாகிஸ்தான் – நியூசிலாந்து | பல்லேகலே |
| மார்ச் 09, பி.ப. 2.30 | இந்தியா – நெதர்லாந்து | டில்லி |
| மார்ச் 10, பி.ப. 2.30 | இலங்கை – சிம்பாவே | பல்லேகலே |
| மார்ச் 11,காலை. 9.30 | அயர்லாந்து – மே.தீவுகள் | மொகாலி |
| மார்ச் 11, பி.ப. 2.30 | பங்களாதேஷ் – இங்கிலாந்து | சிட்டாக்கோங் |
| மார்ச் 12, பி.ப. 2.30 | இந்தியா – தென்னாபிரிக்கா | நாக்பூர் |
| மார்ச் 13,காலை. 9.30 | கனடா – நியூசிலாந்து | மும்பை |
| மார்ச் 13, பி.ப. 2.30 | கென்யா – அவுஸ்திரேலியா | பெங்களூர் |
| மார்ச் 14,காலை. 9.30 | பங்களாதேஷ் – நெதர்லாந்து | சிட்டாக்கோங் |
| மார்ச் 14, பி.ப. 2.30 | பாகிஸ்தான் – சிம்பாவே | பல்லேகலே |
| மார்ச் 15, பி.ப. 2.30 | அயர்லாந்து – தென்னாபிரிக்கா | கொல்கத்தா |
| மார்ச் 16, பி.ப. 2.30 | கனடா – அவுஸ்திரேலியா | பெங்களூர் |
| மார்ச் 17, பி.ப. 2.30 | இங்கிலாந்து – மே.தீவுகள் | சென்னை |
| மார்ச் 18,காலை. 9.30 | அயர்லாந்து – நெதர்லாந்து | கொல்கத்தா |
| மார்ச் 18, பி.ப. 2.30 | இலங்கை – நியூசிலாந்து | மும்பை |
| மார்ச் 19,காலை. 9.30 | பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா | மிர்பூர் |
| மார்ச் 19, பி.ப. 2.30 | பாகிஸ்தான் – அவுஸ்திரேலியா | கொழும்பு |
| மார்ச் 20,காலை. 9.30 | கென்யா – சிம்பாவே | கொல்கத்தா |
| மார்ச் 20, பி.ப. 2.30 | இந்தியா – மே.தீவுகள் | சென்னை |
| மார்ச் 23, பி.ப. 2.30 | காலிறுதி ஏ1 எதிர் பி4 | மிர்பூர் |
| மார்ச் 24, பி.ப. 2.30 | காலிறுதி ஏ2 எதிர் பி3 | அகமதாபாத் |
| மார்ச் 25, பி.ப. 2.30 | காலிறுதி ஏ3 எதிர் பி2 | மிர்பூர் |
| மார்ச் 26, பி.ப. 2.30 | காலிறுதி ஏ4 எதிர் பி1 | கொழும்பு |
| மார்ச் 29, பி.ப. 2.30 | அரையிறுதி | கொழும்பு |
| மார்ச் 30, பி.ப. 2.30 | அரையிறுதி | மொகாலி |
| ஏப்ரல் 02, பி.ப. 2.30 | இறுதிப்போட்டி | மும்பை |

| குழு:– ஏ | | குழு:– பி | |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | இலங்கை | இந்தியா | இங்கிலாந்து |
| பாகிஸ்தான் | சிம்பாவே | தென்னாபிரிக்கா | பங்களாதேஷ் |
| நியூசிலாந்து | கனடா | மேற்கிந்தியத் தீவுகள் | அயர்லாந்து |
| | கென்யா | | நெதர்லாந்து |

# சுதந்திரத்தை பாதுகாக்கும் சவால்...

சாயம் செய்யக் கூடியதும் அழகியது மான நிலங்களாக மாற்றியுள்ளோம்.

கல்வி, சுகாதார சேவைகள் முன்னேற்றம் அடைந்துள்ளன. அரச சேவை பலப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறை வளர்ச்சி அடைவதற்கு தேவையான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலை வாய்பின்மை எப்போதையையும் விட மிக குறைந்த வீதத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அனைத்து பிரதேசங்களிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வீதி அபிவிருத்தி தொடரும்

அதேபோல் சங்குப்பிட்டி, கிண்ணியா, மன்னம்பிட்டி, மன்னார், கட்டுகஸ்தோட்டை பகுதிகளில் பெரும் பாலங்களையும் கொழும்பின் சுற்றுப்புறங்களில் மேம் பாலங்களையும் நாம் நிர்மாணித்துள்ளோம். நாடு முழுவதும் பாரிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கடந்த 5 வருடகாலம் அர்த்தபுஷ்டியானது

வைத்தியசாலைகள்,பாடசாலைகள் போன்று பல்கலைக்கழகங்களும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கதிர்காம கந்தனின் ஆசியுடன் கதிர்காமம் கிரி விஹாரையில் முதலாவது நெனசெல-அறிவகம் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது அது நாடு முழுவதும் பரவியுள்ளது. 5வருடங்களில் கணினி அறிவு உயர் மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மிஹின்லங்காஎனும்புதியவிமான நிறுவனம்ஸ்தாபிக்கப்பட்டது. விற்பனை செய்யப்பட்டிருந்த தேசிய விமான நிறுவனம் மீண்டும் மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டது. காஸ் கம்பனியும் மக்களுக்குசொந்தமாக்கப்பட்டது. எனவே சுதந்திரத்தின் பின் கடந்த 5வருட காலம் மிக அர்த்தபுஷ்டியான காலம் என நாம் பெருமைப்பட முடியும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள மக்கள் அடைந்துள்ள வெற்றிகளை எமது மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.எமது இலக்கு வறுமையை ஒழிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு நாம் வேலை வாய்ப்புகளை விஸ்தரிக்க வேண்டும்.

மின்சாரம்,வீதிகள்,தொலைத் தொடர்பு,கல்வி,சுகாதார சேவைகள் போன்ற அபிவிருத்திகள் மூலம் கிராமங்களுக்கு நகரங்களுக்கும் இடையிலான இடை வெளி நீக்கப்பட்டால்தான் எமது சுதந்திரம் நீடிக்கும்.

பொதுவாக கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவை நாம் கிராமத்திற்கு கொண்டு வந்துள்ளோம். பலமான தன்னிறைவான பொருளாதாரத்திற்கு மஹிந்த சிந்தனை வழி காட்டுகிறது. வெற்றி கரமான வர்த்தக சமூகத்தை மாத்திரமல்லாமல் நல்ல வருமானம் ஈட்டும் விவசாயிகளை உருவாக்கவும் நாம் எதிர்பார்க்கிறோம். மரக் கறிகள்,பழங்கள், தேயிலை, இறப்பர், தேங்காய் என்பவற்றை உலக சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் விவசாயிகளுக்குதமது பொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்க வேண்டும்என எதிர்பார்க்கிறோம். எமதுசொந்த மண்ணுக்கு பெறுமதி சேர்க்கும் பொருளா தாரத்தை ஏற்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்.

### மக்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும்

பயங்கரவாதத்தை எமது படையினர் வெற்றி கொள்வது குறித்து மக்கள் புதிதாக சிந்திக்க ஆரம்பித்தது போலவே நாட்டின் எதிர்கால முன்னேற்றம் குறித்த மக்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். ஒழுக்கத்திற்கு மதிப்பளிப்பது அபிவிருத்திக்கு அவசியமாகும்.

மக்களிடம் பிரபல்யமாகும் தீர்மானங்கள்மூலம்நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

அசௌகரியமான கடினமான தீர்மானங்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியம்.

துட்டகைமுனு மன்னன் தாய் நாட்டை ஒன்றிணைக்கும் தனது பயணத்தை இந்த கதிர்காமக் கடவுளின் ஆசியுடன்தான் ஆரம்பித்தான். எமது வரலாற்றில் பல வெற்றிகரமான சுதந்திரப் போராட்டங்கள் இந்த கதிர்காம கடவுளின் ஆசியுடன் தான் ஆரம்பமாகின.

அதே போன்று ஆசியுடன் முதிர்ச்சியடைந்த ஜனநாயக நாடொன்றின் தலைவர் என்ற வகையில் ஆசியாவின் உயர்ந்த நாடாகும் யுகத்திற்கு உங்களை கொண்டுசெல்லும் பொறுப்புடைமையையும் கடமையையும் ஏற்றுக் கொள்கிறேன் என்றார். (ச-5)

## பொன்சேகாவை சந்...

செய்யப்படும் கைதிகள் தொடர்பான செய்திகளை சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கேஅவர்மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவரை சிறையில் தள்ளி விட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் ஏனையவர்கள் தொடர்பில் குறிப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை எனவும் அவர் ஊடகவியலாளர் களிடம் குறிப்பிட்டார்.

இக் கொடுமையை வெளிப்படுத்தும் முகமாவே நாட்டில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் உண்மைகள் ஒரு நாள் வெற்றிபெறும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறையில் இருந்து விடுதலை செய்யப்படும் கைதிகள் தொடர்பான செய்திகளை சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கு சரத் பொன்சேகா சிறையில் வழங்கப்படும் கட்டைக் காற்சட்டை மற்றும் மேலங்கியுடன் காணப்படும் புகைப்படம் ஒன்றை எடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி நேற்று மாலை ஐக்கிய தேசியக் கட்சி தீப்பந்த ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 'சுதந்திரத்தின் கதறல்'...

மீது கற்கள் மற்றும் தடிகள் கொண்டு தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் காரணமாக ஊடகவியலாளர்களுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதலை நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் ஆதரவாளர்கள் என்று தெரியவந்துள்ளதுடன் அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் அவரது அலுவலகத்தில் இருந்தே தாக்குதலுக்காகப் புறப்பட்டு வந்துள்ளதாகவும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. (ச-5)

## ஹெலிகொப்...

நாணயகார தெரிவித்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகப்பட்டுள்ளவர்களை காப்பாற்றுவதிலும் நிவாரணம் வழங்குவதிலும் விமான படையின் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்.சிறை...

செய்யப்படுவதால் அவர்கள் இழந்த வாழ்வை பெறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் காமினி பண்டார தெரிவித்தார். (ச-6)


JAFFNA COLLEGE PRIMARY SCHOOL

**ANNUAL INTER HOUSE ATHLETIC MEET -2011**

**DATE:** 08.02.2011 (Tuesday)

**TIME:** 1.30 P.M

**Chief Guests**

Mr. L.B.THAMBIRAJAH

(Former Accountant Jaffna College)

&

Mrs.P.THAMBIRAJAH

(Former Primary School Supervisor)

**ALL ARE CORDIALLY INVITED**

JAFFNA COLLEGE VADDUKODDAI

PRINCIPAL SUPERVISOR STAFFS & STUDENTS

(C-2343)


## யாழ்-கொழும்பு பஸ்...

வீதி துண்டிக்கப்பட்டு இருப்பதனால் வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான விநியோகம் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஏ-9 வீதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து தடை காரணமாக எரிபொருள் உட்பட உணவுப் பொருட்களின் விநியோகத்தில் தடை ஏற்படலாமோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

16 குளங்கள் உடைப்பெடுத்து இருக்கின்றன. பெரும்பாலான குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 400 பேர் மழை வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டிருப்பதாக அதிகாரிகளால் கணக்கிடப் பட்டு இருக்கிறது. (எ-5)


அலுவலர் தேவை

A/L சித்தியுடன் நல்ல கையெழுத்துடன் ஆண் பெண் அலுவலர் தேவை

சனி அல்லது ஞாயிறு நேரில் வரவும்

MyWay English

182 - 1/5, Stanley Rd

Jaffna

(சு-2340)

077 33 63 456


## தடுக்கக்கோரி பாது...

இழந்துள்ளதாகவும் இக் கடிதத்தில் அச்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தியமீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையைத் தடுப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தை எதிர் வரும் நாட்களில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இம் மனுவில் குறிப்பிட்டிருந்தது.

இந் நிலையில் மீனவர் சமுதாயத்தின் கடிதத்தையும் பங்குத்தந்தையின் முறைப்பாட்டையும் கவனத்தில் கொண்டே தான் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்ததாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்கு வடமாகாண கடற்றொழில் சமாசம் மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசித்து வருவதாகவும் தெரிய வருகின்றது. (ச-5)


புலமைப் பரிசில்-2011

(நாவலர் வெளியீடு)

பயிற்சிப் பரீட்சை ⑧ல் அதிகூடிய புள்ளி பெற்றோர்

- க.கியூறி- 164 (புனித ஜோண் பொஸ்கோ)
- பா.கவியரசன் - 164 (அச்சுவேலி மத்திய கல்லூரி)
- சி.நாகபூசணி-163 (சாவ/இந்து ஆரம்ப பாடசாலை)

அடுத்த பரீட்சை ⑨

06.02.2011 (ஞாயிறுதோறும்)

பரீட்சை நேரங்கள்

காலை 8.00-10.00 மாலை 2.00-4.00

" 900-11.00 " 300-5.00

" 10.00-12.00 " 4.00-6.00

விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.

நாவலர்

ஆனைப்பந்தி சந்தி,யாழ் நகர்.

(சு-2348)


## மட்டக்...

உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையை தொடர்ந்து குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால் ஊர் பகுதிகளுக்குள்வெள்ளம் அதிகரித்து காணப்படுவதுடன் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை கிண்ணியா பிரதேசத்தில்வெள்ளஅனர்த்தம் காரணமாக இதுவரை சுமார் 800 வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக கிண்ணியா பிரதேச செயலகம் தெரிவித்தது. (ச-5)


**Organ/Violin Notes**

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம் ஆகிய இசைக் கருவிகளுக்கான 310 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் ஆகிய பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

கரவீணா இசை மன்றம்

(3555) 75, கோவில் வீதி, நல்லூர், T.P.:0777031293

**PHYSICS**

**By- R.Kugen**

(New Science Hall & College)

(3639)

**2013 Batch**
அடிப்படை பௌதிகவியல்
செவ், வியா, வெள் (7.30-9.00am)
ஆரம்பம்-08.02.2011

**2012 Batch**
Paper class
திங், செவ், (4.30-5.30pm)
ஆரம்பம்-07.02.2011

**2011 Batch**
இலத்திரனியல் (புதிய பாடத்திட்டம்)
சனி, ஞாயிறு (10.00-11.30am)
ஆரம்பம்-06.02.2011

**2011 Day Batch**
இலத்திரனியல் (பழைய பாடத்திட்டம்)
திங், புதன், (12.00- 1.00 pm)
ஆரம்பம்-07.02.2011

**மின்னியல்**
சனி, ஞாயிறு (7.30-8.30am)
ஆரம்பம்-05.02.2011

**2011 Batch & 2011 Day Batch**
தூண்டல் புலம்
திங், செவ், (5.30-6.30pm)
ஆரம்பம்-07.02.2011

**உடனடி வேலை வாய்ப்புகள்**

*Adobe Photoshop, Corel Draw, Maya, 3D Max, Cinema 4D, Blender, Website Developer, Tamiltyping*

**மொழிபெயர்ப்பாளர்கள் தேவை**

ஆங்கிலம்-தமிழ் (தொழில்நுட்பம் தொடர்பானவை) ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**Microwin Electronics (PVT) Ltd**

*Tel: 077 8688517, email:filetolee@yahoo.com*

(சு-2347)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.